# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 5 | இதழ் 4 | நவம்பர் 25, 1966 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


பன்றி இறைச்சிக் கதை

# பச்சைப் பொய்!

## சீனத் தூதுவராலயத்தின் அறிக்கை

சீனத்தில் இப்போது நடைபெறும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பற்றி முதலாளித்துவ, பிற்போக்குப் பத்திரிகைகளும் திரிபுவாதிகளும், யூ. என். பி-யின் விஸ்வாசமுள்ள அடிவருடி தானே என்பதை நிரூபிக்க பகீரதப் பிரயத்தனம் செய்யும் அமைச்சர் முகம்மதுவும் பல்வேறு விதமான பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இவற்றில் ஒன்றுதான் "பன்றி இறைச்சி" கதை. அமைச்சர் முகம்மதுவும், முதலாளித்துவ பிற்போக்கு ஏடுகளும் என்னதான் தலைகீழ் பிரயத்தனங்கள் செய்தபோதிலும் பாவம், அவர்களால் இதை உண்மை என நிரூபிக்க முடியவில்லை. இது சம்பந்தமாக இலங்கையிலுள்ள சீனத் தூதுவராலயம் விடுத்துள்ள உத்தியோகபூர்வமான அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

ஏகாதிபத்தியவாதிகளும், திரிபுவாதிகளும் பித்துப் பிடித்தவர்களாய் சீனத்தைத் தாக்கிவரும் இச்சந்தர்ப்பத்தில், சமீபத்தில், உள்நாட்டுப் பத்திரிகைகளில் தொடர்ந்து, "பன்றி இறைச்சி சாப்பிட முஸ்லிம்கள் பலவந்தப்படுத்தப்படுகிறார்கள், அதோடு, இமாம்கள் தாக்கப்படுகிறார்கள், மசூதிகளிலிருந்து விரட்டப்படுகிறார்கள்" என்றும், இன்னும் இது போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியும், சீனாவிலுள்ள செங்காவலர்களை அவதூறு செய்யும் சீன—எதிர்ப்புக் கட்டுக் கதைகள் வெளியாகியுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட சீன எதிர்ப்புக் கதைகள் சந்தேகத்திற்கு இடமின்றி வெறும் கட்டுக் கதைகள் என்பதையும், உள்ளாழமான நோக்கங்களுடன், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேச உறவுகளில் பிணக்கைத் தூவும் முயற்சியிலும், அத்தோடு சீன மக்களுக்கும், இலங்கை மக்களுக்கும், முஸ்லிம் நாடுகளுக்கும் இடையிலான நட்புறவைக் கீழ்மைப் படுத்தவும் செய்யப்பட்ட அவதூறுகள் என்பதை மிகவும் கடுமையாக சீன தூதராலயம் இத்தால் குறிப்பிடுகிறது.

சீன, இலங்கை மக்கள் ஒருவருக்கொருவர் நேசமிக்கவர்கள் என்பதை தூதராலயம் குறிப்பிட விரும்புகிறது. சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியையும், செங்காவலர்களின் புரட்சிகர செயல்களையும் இலங்கை மக்கள் சரிவர அறிந்துள்ளார்கள் என நாம் நம்புகிறோம். ஏகாதிபத்தியவாதிகளினதும், திரிபுவாதிகளினதும், மற்றும் எல்லா சீன—எதிர்ப்பு "வீரர்களினதும், போரேறுகளினதும்" கட்டுக் கதைகளினாலும், அபாண்டங்களினாலும், சீன, இலங்கை மக்களுக்கு இடையிலான நட்புறவு எந்த வகையிலும் தகர்ந்துவிடாது.

முதலாளிமார் சம்மேளனத்திற்கு சி. டி. யூ. எப்.

# இறுதி எச்சரிக்கை!

**இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், தனது கோரிக்கைகளை முதலாளிமார் சம்மேளனம் தர மறுத்தால், தனது தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த தனியார் துறை ஸ்தாபனங்களின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவேண்டி நேரிடும் என்பதை இறுதி எச்சரிக்கையாக முதலாளிமார் சம்மேளனத்திற்கு அறிவிக்கும்படி தனது பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசனைப் பணித்துள்ளது.**

இது சம்பந்தமாக தோழர் என். சண்முகதாசன் முதலாளிமார் சம்மேளனத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில், எமது நியாயமான கோரிக்கைகளை நீங்கள் தர தொடர்ந்து மறுத்தால்—தொழிலாளர்களுக்கிடையே நீங்கள் தொடர்ந்து பாரபட்சம் காட்டினால் இதைப்பற்றி மேலும் வேறு முன்னறிவித்தலின்றி வேலை நிறுத்தம் செய்வதைத் தவிரத் தமக்கு வேறு வழியில்லை என்றும், இப்படியான நிலைமைக்கு அவசியம் ஏற்படாதென்று தாம் நேர்மையாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 23-ந் தேதி அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் முழு விவரம் பின்வருமாறு:—

### 12 கோரிக்கைகள்

சென்ற ஒன்றரை வருடங்களுக்கு முன் நாம் உங்களிடம் சமர்ப்பித்துள்ள 12 கோரிக்கைகள் சம்பந்தமாக முன்பு எழுதிய கடிதங்களைத் தொடர்ந்து இக் கடிதத்தை எழுதுகின்றோம். எமது முந்திய கடிதங்களுக்கு இதுவரை நீங்கள் எமக்கு உத்தியோகபூர்வமான பதில் எதுவும் தரவில்லை. நாம் உங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் எவ்வித பலனையும் அளிக்கவில்லை.

உங்கள் ஸ்தாபனங்களில் தொழில்செய்யும் தொழிலாளர்கள் சார்பில் நாம் கேட்டுக் கொண்ட சலுகைகளுக்குச் சமமான சலுகைகளை லிகிதர்களுக்குக் கொடுக்க நீங்கள் இணங்கியுள்ளதாக உங்களால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

இது எமக்குப் புதுமையாகப் படுகிறது. ஏற்கனவே தொழிலாளர்களிலும் பார்க்கக் கூடிய தொழில், ஊதிய வசதிகள் உள்ள லிகிதர்களுக்குச் சம்பள உயர்வு நியாயமானதாக இருக்கையில், தொழிலா

—8-ம் பக்கம் பார்க்க

அல்பேனிய தேசிய தினம்

பகிரங்க சொற்பொழிவு

29-11-66 செவ்வாய்க்கிழமை

மாலை 5 மணிக்கு

கொழும்பு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில்

அண்மையில் அல்பேனியா சென்று வந்த

தோழர்

என். சண்முகதாசன்

அவர்கள்

'இன்றைய அல்பேனியா'

என்னும் பொருள் பற்றி பேசுவார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

சொற்பொழிவு

"சீனத்தின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி"

என்னும் பொருள் பற்றி

டிசம்பர் 2-ம் திகதி வெள்ளி

மாலை 5 மணிக்கு

வெயார்ட்ஸ் பிராட்வே

ஸ்ரீ நாராயணகுரு மண்டபத்தில்

தோழர்

என். சண்முகதாசன்

சொற்பொழிவாற்றுவார்.

"புரட்சியைப் போற்றிய பாடல்"

என்ற சினிமாப் படமும் காண்பிக்கப்படும்.

பிரவேசக் கட்டணம் சதம் -/25

டிக்கட் கிடைக்குமிடம்:

அ. சிதம்பரம் (புத்தகக் கடை)
139, ஸ்ரீகதிரேசன் தெரு
(செக்கடித் தெரு)
கொழும்பு-13.

ஒழுங்கு செய்வோர்:
செஞ்சுடர் இலக்கிய மன்றம்

(இச்சொற்பொழிவு ஏற்கனவே தெரிவித்தவாறு டிசம்பர் 3-ம் திகதி நடைபெற மாட்டாது என்பது கவனத்திற்குரியது.)

சுண்ணாகம் சம்பவம் பற்றி பாராளுமன்றத்தில்

# கம்பஹா எம்.பி. கேள்வி

கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். டி. பண்டாரநாயக்க பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்கவிருக்கின்றார்.



(அ) சாதி ஒழிப்பை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் ஒக்டோபர் 21-ம் திகதி நடந்த பொதுக் கூட்டத்தையொட்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேசக் கிளை சுண்ணாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லஇருந்த ஊர்வலத்திற்கு யாழ்ப்பாணப் பொலீஸ் ஏன் உத்தரவு கொடுக்க மறுத்தது?

(ஆ) இவ் ஊர்வலத்தை ஒழுங்கு செய்தவர்களுக்கு அது அனுமதிக்கப்படவில்லை என்ற முடிவு, ஏன் ஊர்வலம் தொடங்குவதற்கு 24 மணித்தியாலத்திற்கு முன்புதான் அறிவிக்கப்பட்டது?

(இ) ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டபோது, சுண்ணாகத்தில் கூடியிருந்த மக்கள் யாழ்ப்பாணத்திற்கு நடந்து செல்ல ஏன் அனுமதிக்கப்படவில்லை?

அவர் பிரதமரைக் கேட்கும் மற்றுமொரு கேள்வி:—

(அ) அக்டோபர் 21-ம் திகதி சாதி ஒழியவேண்டுமெனக் கூறி சுண்ணாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நடந்து சென்றவர்கள் ஏன் தாக்கப்பட்டனர்? ஏன் சிலர் கைது செய்யப்பட்டனர்?

(ஆ) தாக்குதலுக்குப் பின் அவர்கள் சுண்ணாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நடந்து செல்ல ஏன் அனுமதிக்கப்பட்டனர்? (சில நிமிடங்களுக்கு முன்புதான் இவ்வனுமதி மறுக்கப்பட்டது.)

(இ) ஊர்வலத்தை நடத்தவிருந்த தலைவர்களை பொலீசார் தாக்குவதற்கும், பின் கைது செய்வதற்குமாகவா?

(ஈ) சமூகக் குறைபாட்டுச் சட்டம் அமுலிலுள்ள சட்டமாக இருக்கையில், அச்சட்டத்தின் கொள்கைகளை ஆதரித்த ஊர்வலத்துடன் ஒத்துழைத்துப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது பொலீசாரின் கடமை இல்லையா?

## 1000 மும் 28 ம்!

இந்த வருட முடிவுக்குள் அரசாங்கம் நாடு பூராவும் 1000 கைத்தறி நெசவு நிலையங்களை நிறுவும் என யு என். பி-அமைச்சர் தகநாயக்க போகும் இடங்களிலெல்லாம் உறுதிகூறித் திரிந்தார். இந்த வருடம் முடியப் போகிறது. ஆனால் இதுவரை நிறுவப்பட்ட நெசவு நிலையங்களின் தொகை 28! இது அமைச்சரே தன் வாயால் சொன்ன எண்ணிக்கை? 1000 மும் 28 ம்! எப்படியிருக்கிறது! யூ. என். பி. ஆட்சி தன் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதியை எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறது என்பதற்கு இது ஒரு அசைக்க முடியாத உதாரணம்.

## கட்சிப் பத்திரிகை



நாம் உண்மையை உறுதியாக உயர்த்திப் பிடிக்கவேண்டும். உண்மை என்பது ஒருதெளிவான நிலைப்பாட்டைக் கோருகின்றது. நமது கருத்துக்களை மறைப்பதை, கம்யூனிஸ்டுகளாகிய நாம் எப்பொழுதும் இழிவானதாகக் கருதுகின்றோம். நமது கட்சி நடத்தும் பத்திரிகைகளும், நமது கட்சியின் பிரசார வேலைகள் அனைத்தும் தெளிவானவையாக, துலாம்பரமானவையாக, கூர்மையானவையாக இருக்க வேண்டும். அவை முணுமுணுப்பவையாகவோ, கீழ்க் குரலில் கூறுவனவாகவோ இருக்கக்கூடாது. நமக்கு, புரட்சிகரப் பாட்டாளி வர்க்க கருத்துக்கு உரிய கம்பீரமான நடை இது. மக்கள் உண்மையை அறியும்படி அவர்களுக்குப் போதிக்க, தமது சொந்த விமோசனத்திற்காகப் போராடும்படி அவர்களைத் தட்டியெழுப்ப நாம் விரும்புகின்றோம். எனவே இத்தகைய கம்பீரமான நடை நமக்கு அவசியமாகின்றது. மழுங்கிய கத்தி இரத்தம் சிந்தாது.

—மாஓ.

## தலையங்கம்

# அல்பேனியா நீடூழி வாழ்க!

நவம்பர் 29-ந் தேதி அல்பேனிய தேசிய தினம். கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சின்னஞ்சிறிய நாடான அல்பேனியா நெடுங்காலமாக பல ஐரோப்பிய வல்லரசுகளின் ஆக்கிரமிப்புக்கு இலக்காகி அல்லற்பட்டது. கடைசியில் துருக்கி ஏகாதிபத்தியத்தினுல் அடிமைப்படுத்தப்பட்டது. ஆனுல் அல்பேனிய மக்கள் துருக்கி ஏகாதிபத்தியத்திற் கெதிராகப் போரிட்டு 1912-ல் தமது தாயகத்தைச் சுதந்திர நாடாக்கினர். இரண்டாவது உலக யுத்தத்தின் போது இத்தாலிய பாசிஸ்டுகளின் ஆக்கிரமிப்புக்கு இலக்காகித் துன்புற்றது. 1941 நவம்பரில் தோழர் அன்வர் ஹோஷாவின் தலைமையில் அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி (இப்போது அல்பேனிய தொழிலாளர் கட்சி) அமைக்கப்பட்டதும் இருண்டு கிடந்த அல்பேனியாவில் புதிய ஒளி தோன்றியது. பாசிஸ்ட் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து தாயகத்தை மீட்க வீறுகொண்டெழும்படி அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. விடுதலை வேட்கையும், சுதந்திர தாகமும் கொண்ட அல்பேனிய மக்கள் இத்தாலிய பாசிஸ்டுகளைத் தமது மண்ணிலிருந்து துடைத்தெறிய அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் அணிதிரண்டனர். தொழிலாளர் விவசாயிகள், ஆண்—பெண், வயோதிபர் வாலிபர் அனைவரும் ஆயுதம் தாங்கி இத்தாலிய பாசிஸ்டுகளுக் கெதிராக வீரஞ்செறிந்த விடுதலை யுத்தத்தை நடத்தி 1944 நவம்பர் 29-ந் தேதி வெற்றியீட்டினர். சோஷலிச அல்பேனியா உதயமாயிற்று. கரண்டலும், அடிமைத்தனமும் ஒழிக்கப்பட்டன. சுதந்திர சூரியன் நாடு முழுவதும் பூரணமாகப் பிரகாசிக்கத் தொடங்கினுன்.

இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் செஞ்சேனையின் உதவியுடன் விடுதலையடைந்தன. ஆனுல் சின்னஞ் சிறிய அல்பேனியா சோவியத் செஞ்சேனையின் உதவியின்றி தன்னை விடுவித்துக் கொண்டது இங்கே குறிப்பிடத்தக்கது.

1944-ல் விடுதலை பெற்றதிலிருந்து இன்றுவரை அல்பேனியா, தோழர் அன்வர்ஹோஷாவின் தலைமையிலுள்ள அல்பேனிய தொழிலாளர் கட்சியின் சரியான வழிகாட்டலின் படி சோஷலிச நிர்மாணத்தில் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், சோவியத் தலைமையிலுள்ள நவீன திரிபுவாதத்திற் கெதிராகவும் இம்மியும் தளராமல் அஞ்சாமையோடு போராடிவருவது பாராட்டுதலுக்குரியது. சில சலுகைகளுக்காகவோ, நன்மைகளுக்காகவோ அந்தத் துணிகரமான நாடு தனது கொள்கையை விற்றுவிடவில்லை. நவீன திரிபுவாதிகளின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிவிடவில்லை; மித்திர துரோகத்தைக் கண்டு திகிலடையவில்லை. அந்த வீரம் செறிந்த இளம் அல்பேனியா, சோஷலிசத்தின் மீதும், மார்க்சிச—லெனினிசத்தின்மீதும், உலகப் புரட்சியின்மீதும் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள தோழர் அன்வர்ஹோஷாவின் தலைமையிலுள்ள அல்பேனிய தொழிலாளர் கட்சியின் சரியான, சீரிய வழிகாட்டலின்படி தொடர்ந்து முன்னேற நாம் வாழ்த்துகின்றோம்!

சோஷலிச அல்பேனியா நீடூழி வாழ்க!

## சத்தியாக்கிரகம்

# சூழ்ச்சிக்குப் பலியானது ஏன்?

சாதி முறைக் கெதிராகவும், குறிப்பாக ஆலயப் பிரவேச உரிமை கோரியும் சிறுபான்மை ஐக்கிய முன்னணி நவம்பர் 18-ந் தேதி நடத்தத் திட்டமிட்டிருந்த சத்தியாக்கிரகம் யாழ்-கச்சேரியில் நடந்த ஒரு ''சமரச'' மாநாட்டை ஒட்டி திரும்பவும் மூன்று மாதத்திற்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இது, விஷயம் தெரிந்தவர்களால் ஓரளவு எதிர்பார்க்கப் பட்டதுதான். தமதுமனித உரிமைகளுக்காக ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் இயக்கம் போராட்ட வடிவம் எடுக்கும் உச்ச கட்டத்தை எட்டும் போது, ''உயர் சாதி''க் குள்ளிருக்கும் சாதித் தடிப்புப் பிரமுகர்களினதும், தமிழரசு—தமிழ் காங்கிரஸ் தலைவர்களினதும் பல்வேறு தந்திரங்களினுலும், சூழ்ச்சிகளினுலும் முறியடிக்கப்படும். இந்த இயக்கங்களை நடத்தும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 'தலைவர்கள்' பலர் இத் தந்திரங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் பலியாகி ''ஒத்திவைப்பு'' என்ற பெயரில் இயக்கத்தை இடையிலே கைவிட்டு விடுவார்கள். இயக்கங்களுக்கும், போராட்டங்களுக்கும் சில விளம்பரத் தலைவர்களாலும், சுயநலத் தலைவர்களாலும் ஒரு விதமாகச் செய்யப்படும் ''கழுத்தறுப்பு'' இது. இப்படிப் பல தடவை நடந்திருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்பும் நடத்தப்பட இருந்த சத்தியாக்கிரகமும் இப்படித்தான் ''ஒத்திவைப்பு'' மூலம் ''கழுத்தறுக்கப்பட்டது.''

போராட்டக் களத்திலும், போராட்ட சமயத்திலும். ''சமரசம்,'' ''பேச்சுவார்த்தை'' என்பதெல்லாம் சுரண்டும் வர்க்கத்தினதும், ஆதிக்கம் செலுத்தும் வகுப்பாரினதும் மாய வித்தை. இந்த மாய வித்தைகளின் மூலம் எத்தனையோ உரிமைப் போராட்டங்களும், தேசிய விடுதலைப் போராட்டங் களும் நசுக்கப்பட்டுள்ளன; இடையில் கைவிடப்பட்டுள்ளன; கழுத்தறுப்புச் செய்யப்பட்டுள்ளனர். திசை திருப்பப்பட்டுள்ளன. இது சரித்திரம். அனுபவம் காட்டும் உண்மை. இந்த மாய வித்தையைப் பாவித்துத்தான் 18-ந் தேதி சத்தியாக்கிரகப் போராட்டத்தின் கழுத்தும் திருகப்பட்டுள்ளது.

உரிமைகளையும், சுதந்திரங்களையும் வழங்கிவிட்டால் போராட்டம் தானுவே நின்றுவிடுமே—சமரசமும், சமாதானமும் தானுகவே ஏற்பட்டுவிடுமே! அப்படியானுல் இவற்றை வழங்குவதற்கு முன்னதாகவே ''சமரசமும்'' பேச்சுவார்த்தைகளும் ஏன்? உரிமைகளையும், சுதந்திரங்களையும் வழங்குவதுதான் சமரசத்திற்கும் சமாதானத்திற்கும் அடிப்படை என்பது இவர்களுக்குத் தெரியாதா? ஆனுல் இவற்றை வழங்குவதை விட்டுவிட்டு ''சமரசம்'' ''பேச்சுவார்த்தை'' என்று நாடகம் ஆடுவது ஏன்?

இதில்தான் சூழ்ச்சி அடங்கியிருக்கிறது. ''பேச்சுவார்த்தை,'' ''சமரசம்'' என்ற மாய வித்தையின் மூலம் எழுச்சியும், வேகமும் பெற்றுவரும் உரிமைக் கிளர்ச்சிகளையும், விடுதலை போராட்டங்களையும் முனை மழுங்கச் செய்வது—தளரச் செய்வது—இயக்கத்திற்குள் இருக்கும் சுயநலத் தலைவர்களையும், பலவீனமுடையவர்களையும் ஆசை வார்த்தைகளாலும் ''வாக்குறுதிகளா''லும், பட்டம் பதவிகளாலும் ஏமாற்றித் தமது பக்கம் இழுத்து வைத்துக்கொண்டு போராட்டங்களை பலவீனப் படுத்துவது—பிரச்சினையை ரப்பரைப் போல் இழுத்து, வெண்டக்காய் வழ வழப்பைப் புகுத்தி இயக்கத்திற்குள்ளும், போராட்டத்திற்குள்ளும் சோர்வை உண்டாக்கி, இறுதியில் நம்பிக்கை யீனத்தையும், விரக்தியையும் ஏற்படுத்விடுவது! இதன் விளைவு என்ன? இயக்கம் படுத்துவிடும்! கிளர்ச்சிகளும், போராட்டங்களும் குளோஸ்! தொடர்ந்து சுரண்டலும், ஆதிக்கமும், சாதிகளும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும்!

''சமரசம்'' ''சமாதானப் பேச்சுவார்த்தை'' இவை எவ்வளவு அழகான வார்த்தைகள்.! எவ்வளவு இனிப்பான வசனங்கள்! இந்த வேலிக்களை ஒட்டிக்கொண்டு உரிமைக் கிளர்ச்சிகளுக்கும், விடுதலைப் போராட்டங்களுக்கும் நஞ்சூட்டும் சரக்குகளை ஏகாதிபத்தியவாதிகள் சர்வதேச அரசியல் மார்க்கட்டில் விற்பனைக்குக்கொண்டு வந்திருப்பது போலவே, இங்கேயும் உள்நாட்டு பிற்போக்குவாதிகள் சத்தியாக்கிரக மார்க்கட்டில் கொண்டுவந்து விற்றிருக்கின்றனர்.

''சமரசப் பேச்சுவார்த்தைகள்'' மூலம் இன்னும் மூன்று மாதத்திற்குள் ஒரு பகுதிக்கு ஒருகோயிலாவது திறந்துவிடப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. எல்லாக் கோயில்களையும் திறந்தால் என்னவாம்! கடவுளர்க்குள்ளேயும், கோயில்களுக்கிடையேயும் கூட சாதிப் பாகுபாடு இருக்கிறது போலும்! இந்தச் ''சமரச, சமாதானப் பேச்சுவார்த்தைகள்'' கூட எல்லா ஆலயங்களையும் திறந்துவிட வாக்குறுதி அளிக்கவில்லை! இதிலிருந்து இந்த ''சமரச, சமாதானப் பேச்சுவார்த்தைகளு''க்குள் இருக்கும் நச்சுத்தனம் அம்பலமாகிறதல்லவா?

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். சத்தியாக்கிரகம், ''சமரச, சமாதனப் பேச்சுவார்த்தை'' ஆகியவற்றினுல் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை.

★

# பொலிஸ் கெடுபிடி

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டாலும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் வாலிபர் சங்கங்களும் தனியாக தொடர்ந்து நடத்தி வரும் சாதி ஒழிப்பு இயக்கம் கிராமம் கிராமமாகப் பரவி வருகிறது. இந்த இயக்கத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் அணி அணியாகத் திரள்கின்றனர். கிராமங்களில் உள்ள மக்கள் தாமாகவே பணம் வசூலித்துப் பிரசாரக் கூட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

ஆனுல் இந்த சாதி ஒழிப்பு இயக்கத்தை வெற்றி பெருமல் தடுப்பதற்கு சாதி வெறியர்களும், ''உயர் சாதிக் கொம்பர்களும்'' பொலிசும் பல்வேறு தடைகளைப் போட்டு வருகின்றனர். பொதுவாக யாழ்ப்பாணத்திலும் சரி, வடபிரதேசக் கிராமங்களிலும் சரி எந்தக் கூட்டங்களும் இரவு பதினெரு மணிக்கு மேலும் நடைபெறுவது வழக்கம். ஏனெனில் வயல்களிலும் தோட்டங்களிலும் பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு இரவு ஏழு மணிக்கு மேல்தான் கூட்டங்களுக்கு வருவர். ஆனுல் பொலிஸ் சாதி ஒழிப்புக் கூட்டங்களுக்கு ஏழு மணி வரையும்' மிகவும் வற்புறுத்திக் கேட்டால் எட்டு மணி வரையும் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதிக்கின்றனர். இவ்வாறு ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்யும் தமது சேவையில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர்.

சில கிராமங்களில், கூட்டம் நடத்த இடமளித்தவரைக் கூப்பிட்டு, ''கம்யூனிஸ்டுகளுக்குக் கூட்டம் நடத்த இடம் கொடுக்கிருய், நீ யாருக்குப் பிறந்த நீ'' என்று தமது தரத்தையும் வெளிக்காட்டிக் கேட்கிறுர்களாம். இன்னும் சிலரிடம் 'அந்தஇடம் உன்னுடையதுதான் என்பதை அத்தாட்சிப்படுத்த உறுதிகொண்டுவா' என்று கேட்கின்றனராம். ஒரு கிராமத்தில் கூட்டத்திற்கு இடமளித்தவர் உறுதியைக் கொண்டுபோய்க் காட்டவேண்டியும் இருந்ததாம்.

கிராமங்களில், கூட்டம் நடைபெறும் தினத்தில் காலையிலிருந்து, கூட்டம் நடைபெறும் நேரம்வரை பொலிஸ் ஜீப்களிலும், வேன்களிலும் சுற்றிச் சுற்றி வருகின்றனராம். கூட்டத்திற்கு மக்களைச் செல்ல விடாமல் பயமுறுத்தும் நடவடிக்கை இது. ஆயினும் இவற்றையெல்லாம் மிஞ்சி கூட்டங்கள் ஒழுங்காக நடக்கின்றன. மக்களும் திரள்கின்றனர்.

-திருமகன்

# போதனுமொழி எதுவாக இருக்கவேண்டும்?

**-டாக்டர் ஆர். டபிள்யூ. குரொசட் தம்பையா**

**சாதாரண சிங்கள மாணவனும், தமிழ் மாணவனும் பேசுவது தாய் மொழி. பொதுத் தராதர வகுப்புவரை தாய்மொழியிலேயே கல்வி பயில்கின்றுன். சில வருடங்களுக்கு அவன் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்றிருக்கலாம். ஆனுல் அவனுடைய சிந்தனை, எழுத்து, பேச்சு எல்லாமே தாய்மொழியில்தான் இருந்திருக்கும். பொதுத் தராதர வகுப்பில் விரைவான ஆங்கில போதனையுடன் ஆங்கிலம் போதனுமொழியாக மாறுகிறது.**

விஞ்ஞானம், பல்கலைகள் ஆகிய பாடங்களை விரிவாகவும், கவனமாகவும் கற்க ஆரம்பிக்கும் பருவத்தில், இனிமேல் படிக்கவேண்டிய நூல்கள் ஆங்கிலத்தில் இருப்பதால் அந்த மாணவன் நேரத்தையும், சக்தியையும் கடினமான ஆங்கிலத்தைக் கற்பதில் விரயம் செய்யவேண்டும் என்றுல் அவன் எவ்வளவு பரிதாபத்திற்குரியவன்!

இம்மாணவர்கள் அநேகரின் வீட்டு மொழி சிங்களம், அல்லது தமிழ் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கலாநிதி மலலசேகர அளித்துள்ள மிகவும் வியக்கத்தக்க கூற்று யாதெனில், மாணவர்களுக்கு சிங்கள, தமிழ் மொழிகளில் தேர்ச்சி இருப்பதை உறுதிப்படுத்த அவர்கள் சிங்களமும், தமிழும் ஒரு பாடமாக எடுத்து அதில் சித்தியடையவேண்டும் என்று விதிப்பது என்பதாகும். கலாநிதி மலலசேகரா இங்கிலாந்தில் வசித்ததன் பலனுக அவர் இங்கு ஆங்கிலேய மாணவர்களின் பிரச்சினைபற்றிச் சிந்திப்பதாக எண்ணுகின்றுர் போலும்!

## பிரச்சினையைத் தீர்க்க முடியும்

மொழிப் பிரச்சினை இலங்கைக்கு மட்டும் பிரத்தியேகமான தொன்றல்ல. அநேகமாக எல்லா நாடுகளிலும் இப்பிரச்சினை உண்டு. குறிப்பாக ஆசியாவில், (மேற்கத்திய) தொழில் புரட்சிக்குப் பிறகு ஐரோப்பிய மொழிகள்—விசேஷமாக ஆங்கில மொழி ஆதிக்கம் செலுத்துமுன், வளர்ச்சியடைந்த மொழிகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக உபயோகத்தில் இருந்த நாடுகளில் இப்பிரச்சினை உண்டு. அபிவிருத்தியடைந்து வரும் பல நாடுகள், மக்களின் சிறந்த பயன் கருதியும், சகலரின் திருப்தியுடனும் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

முக்கியமான ஒரு பிரச்சினையை நாம் இங்கு கவனிக்க வேண்டும். ஒரு மொழியைக் கற்பது என்பது வேறு, போதனு மொழி என்பது வேறு. அண்மையில் செனெட் சபை உறுப்பினர் திரு ஜெயசூரிய பிரதமருக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் இப்பிரச்சினையைக் குழறுபடி செய்துள்ளார்.

## குறிப்பிட்ட பிரதேசங்கள்

இலங்கையில் உள்ள சகல மாணவர்களும் சிங்களம் படிக்கவேண்டும். இன்று நாடு பூராவும் சிங்களத்தை உபயோகிப்பதை தமிழரசுக் கட்சியினர் கூட ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அம்மொழியைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது பெரும் குறைபாடாகிவிடும். ஆனுல் தமிழ் பிரதேசத்தில் தமிழ் மாணவனுக்கு போதனு மொழி சிங்களமாய் இருக்கவேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. தமிழ் பிரதேசங்கள் உண்டு என்பதை நாம் மறுக்கப்போகிறேமா? வட கீழ் மாகாணங்களில் சிங்களவர்களும் வசிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. தீவின் ஏனைய பகுதிகளிளெல்லாம் தமிழர்களும் வசிக்கின்றனர். மேல், மத்திய மாகாணங்களில் தமிழர்கள் வசிப்பதனுல் அந்த மாகாணங்கள் சிங்களப் பிரதேசங்கள் அல்ல என்று எவரும் வாதாடப்போவதில்லை அதேபோல் வட கீழ் மாகாணங்களில் சிங்களவர்கள் வசிக்கின்றனர் என்பதனுல் அவை தமிழ் பிரதேசங்கள் அல்ல என்று வாதிடவும் முடியாது ஒரு பகுதியில் வசிக்கும் 90% விகித மக்கள் புறம்பான ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களாக, புறம்பான மொழிபேசுபவர்களாக, புறம்பான சமய வழிபாடுடையவர்களாயிருப்பின் அவர்களில் பெரும்பாலோர் அப்பிரதேசத்தைவிட்டு வெளியே ஒரு போதும் செல்லாதவர்களாயின், அப்பிரதேசம் ஒரு குறிப்பிட்ட பிரதேசமாகும். இப்பெரும்பாலோர் சிங்களவர்களாயின் அது சிங்களப் பிரதேசம். தமிழர்களாயின் அது தமிழ் பிரதேசம். பல இனத்தவரும் பல பகுதியினரும், புறம்பான பிரதேசங்கள் வேண்டுமென்று கூற முன்வருவர் என்று செனெட்டர் ஜெயசூரிய கூறுவது அர்த்தமற்றதாகும். அப்பேற்பட்டவர்கள் பிரதேசவாரிகளுக்கான குணும்சங்கள் உடையவர்கள் அல்லர்.

## பிரதேசங்களில் போதனு மொழிகள்

தமிழ் பிரதேசங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் பிரச்சினை இலகுவாகத் தீர்க்கப்படலாம். தமிழ் பிரதேசத்தில் கல்வி பயிலவேண்டிய போதியளவு சிங்கள மாணவர்கள் இருப்பின் அவர்களுக்கு வசதியான ஒரு பாடசாலையில் சிங்களத்தை போதனு மொழியாகக்கொண்ட பகுதி ஒன்றை நிறுவலாம். சில சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு ஏற்கெனவே இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை எப்படிஇருக்க வேண்டுமென்றுல், சகல சிங்களப் பாடசாலைகளிலும் சிங்களம் போதனு மொழியாய் இருத்தல்வேண்டும். சகல தமிழ் பாடசாலைகளிலும் தமிழ் போதனு மொழியாய் இருத்தல் வேண்டும். அத்தோடு 3-ம் வகுப்புக்குப்பின்பு சிங்களம் ஒரு கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும். முஸ்லிம் பாடசாலைகள் அப்பிரதேசத்து மக்கள் விரும்பிய மொழியைக் கற்பிக்கவேண்டும். இன்று சிங்களம் நாடு பூராவிற்கும் அரசகரும மொழி என்றும், வட கீழ் மாகாணங்களுக்கு தமிழ் நியாயமான உபயோகம் என்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கையில், பெரும்பான்மை மக்களின் மொழியான சிங்களம் இலங்கையில் முக்கிய இடத்தைப் பெறவேண்டியது இயல்பு. எந்தத் தமிழனும் அதை வெறுக்கமாட்டான்.

சிங்களம் மட்டும் சட்டம் திணிக்கப்படும்வரை, யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் சிங்களம் ஒரு பாடமாக போதிக்கப்பட்டது உண்மை. ஆங்கில மோகம் கொண்ட எமது அரசியல்வாதிகள் ஆங்கிலேயனிடமிருந்து அவனுடைய தந்திரத்தையும் கற்றுக்கொள்ளவேண்டும். பிரித்தானியர்கள் தமது சாம்ராஜ்யத்தை ''பிரித்தானிய சாம்ராஜ்ய''மென அழைக்கும் காலம் போய்விட்டது என்று தெரிந்ததும்; அதை பிரித்தானிய காமன்வெல்த் என்றழைத்தனர்.

> போதனுமொழி எதுவாயிருக்க வேண்டும் என்ற பிரச்சினை திரும்பவும் தலைதூக்கியுள்ளது. இப்போது எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்துள்ள இப்பிரச்சினையில் தனது கருத்தை எடுத்துக் கூறுகின்றுர் டாக்டர் ஆர். டபிள்யூ. குரொசற் தம்பையா அவர்கள். போதனுமொழி பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. முன்பகுதி சென்றவார இதழில் பிரசுரிக்கப்பட்டது. மறுபகுதி இந்த இதழில் இடம்பெறுகிறது.

## வெகுஜனங்களுக்குக் கிடைக்கவேண்டும்

எமது அரசியல்வாதிகள் அரசகருமமொழிச் சட்டத்தைக் கொண்டுவரும்போது (உண்மையில் வந்ததும் அதுவே) அதை சிங்களம் மட்டும் சட்டம் என்று சொல்லி சிங்களவரல்லாதாரைத் தூண்டிவிட்டனர்.

ஒரு நாட்டில் இரு மொழிகள் இருப்பது நாடு பிளவுபட ஏதுவாகும் என்று பல நேர்மையான மக்கள் நினைக்கின்றனர். இது உண்மையல்ல கனடாவில் ஆங்கிலமும், பிரஞ்சு மொழியும் இருந்தாலும் அது ஐக்கியப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து பல மொழிகள் உள்ள மற்ருெரு நாடு. இலங்கையின் ஐக்கியத்திற்குத் தேவைப்படுவது தனி ஒரு மொழியல்ல. சகல மக்களுக்கும் பயன்தரக்கூடிய பொதுவான ஓர் வேலைத் திட்டமாகும்; இலங்கையின் சகல மக்களும் ஒற்றுமையாக உழைக்கக்கூடிய திட்டமாகும்.

இலங்கையின் துரித வளர்ச்சிக்கு உயர்தர தொழில்நுட்பக் கல்வி வசதிகள் வெகுஜனங்களுக்குக் கிடைக்க வேண்டும். இது சிங்களப் பிரதேசங்களில் சிங்களத்திலும், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலும்போதிக்கப்படவேண்டும். உயர்தர தொழில்நுட்பக் கலைகள் பயில்வதற்குமுன் வெகுஜனங்களை ஆங்கிலம் கற்கும்படி கூறுவது வீண் விரயம், முடியாத காரியம் என்பது என் கருத்து.

பயனுள்ள பிரஜைகளாக வருவதற்குமுன் பொதுமக்களின் இலட்சக்கணக்கான பிள்ளைகளை அந்நிய மொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறும்படி வற்புறுத்துவதிலும் பார்க்க, தேவையான நூல்களை சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்ப்பது வெகு சுலபம்.

இடைப்பட்ட காலத்தில் பாடப் புத்தகங்களுக்கும், விரிவான அறிவிற்கான நூல்களுக்கும் பற்றுக்குறை இருக்கும். ஆனுல் இலங்கையில் இலட்சக்கணக்கான பிள்ளைகளுக்கு கல்வியளிப்பதுபற்றி நாம் மிகவும் அக்கறையோடு விரும்பினுல் இவ் இடைக்காலத்திற்கு முகங் கொடுக்கத்தான் வேண்டும் உண்மை யாதெனில் இப்பிரச்சினையில் ஈடுபடுவதற்கு கடுமையான முயற்சிகள் இன்னும் எடுக்கப்படவில்லை. இலங்கையில் இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பல காலம் விரையமாக்கப்பட்டுவிட்டது. இப்போதாவது தொழில்நுட்ப உயர்கல்விமக்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்ற முடிவிற்கு நாம் வந்தால், எமக்கு தேவையான நூல்களைத் தயாரிப்பதில் நாம் உடனடியாகக் கவனம் செலுத்தத் தொடங்குவோம். பத்து வருடங்களில் இந்த அடிப்படைத் தேவைகளை பூர்த்தியாக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

வேலை ஆரம்பித்துவிட்டால் அது துரிதமாக முன்னேறும். எமது தேவையைப் பூர்த்தி செய்யப் பலரும் முன் வருவர்.

மக்களுக்கு உயர் கல்வி புகட்டுவதானுல் இதைத் தவிர வேறு வழியில்லை.

எமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, பொருளாதார வளர்ச்சி அடையச் செய்வதற்கு, எமது நிலங்களில் புதைந்துகிடக்கும் பொருட் செல்வத்தைவிட முக்கியமான வெகுஜனங்கள் மத்தியில் புதைந்துகிடக்கும் அறிவுச் செல்வத்தை நாம் தேடி எடுக்கவேண்டும்.

---

### மட்டக்களப்பு வாலிபர் சங்கத்தின்

# வெள்ள நிவாரண சேவை

''மட்டக்களப்பு வாலிபர் சங்கத்தினர் இன்று எடுக்கின்ற இந்த வெள்ள நிவாரணக் கஷ்ட நிதிக்கான 'கலைவிழாவில்' பங்குபற்றுவதன் மூலம் இந்த நல்ல வாலிபர்களின் இயக்கத்துக்கு உதவுகிறேன் என்று எண்ணும்போது நான் பெருமையடைகிறேன்''. இவ்வாறு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் வெள்ள நிவாரண நிதிக்கான கலைவிழாவில் தலைமைவகித்துப் பேசிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். யோகநாதன் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு வரவேற்வேற்புரை கூறிய திரு. க. தங்கவடிவேல் அவர்கள் தமது உரையின்போது ''பிரதிவருடமும் இலங்கையின் எப்பாகத்திலாவது வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. அதன் பிடியில் சிக்கிய மக்களைக் காப்பாற்ற அரசாங்கமும் பொது மக்களும் மன்றங்களும் 'லிஸ்ற்' தூக்கும் வேலையைத் தவருது செய்கின்றனர், இந்நிலைக்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் உட்பட எல்லோரும் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தவேண்டும். வெள்ளையரின் ஆட்சியின்போது திட்டமிடப்படாது தமக்குப் பெரும் பொருள் சேர்க்கும் எண்ணம் கொண்டு மலைகளின் உச்சியிலுள்ள உயர்ந்த காடுகளையழித்துப் பெரும் தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர். மலையிலே இருந்து விழும் அருவிகள் மழை வீழ்ச்சியின் காரணமாகப் பெருக்கெடுக்கும் போது காலப்போக்கில் மலையிலே கிடந்த மணற்பாங்கான பிரதேசங்கள் யாவும் கழுவுண்டு நதிகளுக்குள் கொட்டுப்படலாயின. இதன் விளைவால் நதிகளில் மணல் கொட்டுண்டு அவை ஆழமற்றுப் போயின. எனவேதான் சிறிய மழைக்கும் கூட தாக்குப்பிடிக்க முடியாமல் நதிகள் பெருக்கெடுத்தோடுகின்றன இந்த நிலைமை இனிமேலும் நீடிப்பது இலங்கையின் செல்வங்களைக் கடலுக்குள் கொட்டுவதற்கொப்பாகும்'' என்றுர்.

வாலிபர் சங்கத் தலைவர் திரு. கே. கணேசமூர்த்தி பேசும்போது ''இந்த வாலிபர்கள் இதுபோன்ற சேவைகளைத் தொடர்ந்தும் இலங்கை வாழ் மக்களுக்கு ஆற்றக் காத்துக் கொண்டிருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

மாணவர் காட்சிக்குத் தலைமைவகித்த திரு. என். அருளானந்தம் (மட்டு நகர சபை அங்கத்தவர்) அவர்கள் வாலிபர் சங்கத்தின் சேவைகளைப் பெரிதும் பாராட்டிப் பேசினுர்.

மேற்படி நிகழ்ச்சிக்கு ஒலி பெருக்கி, ஒளி வசதிகள், சுவரொட்டி, துண்டுப்பிரசுரம், நுழைவுச் சீட்டு, குளிர்பானம், சிற்றுண்டி, வாகன வசதிகள் போன்ற இன்னும் பல உதவிகளை பலர் இலவசமாகக் கொடுத்ததாகவும் நகரமண்டபத்தை மட்டக்களப்பு நகரசபையினர் இலவசமாகக் கொடுத்துதவியதாகவும் தெரியவருகிறது.

---

# மோசடிப் பேர்வழிகளை அம்பலமாக்கவேண்டும்

''மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சிறிதளவாவதுத் தீர்க்கும் முகமாக நிறுவப்படும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று மக்களின் பணத்தில் நடக்கும் ஊழல் ஸ்தாபனங்களாக மாறி வருவதைப் பொது மக்கள் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது. அதில் உள்ள மோசடிப் பேர்வழிகளை நிச்சயம் அம்பலப்படுத்தியே ஆகவேண்டும்'' இவ்வாறு மட்டுவில் மோனதாஸ் சன சமூக நிலையத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. சி. இராசையா குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், ''ஒரு கிராமத்தின் முன்னேற்றம் வாலிபர்களின் விடா முயற்சி, ஒத்துழைப்பு ஆகியவற்றில்தான் தங்கியிருக்கிறது. எமது சன சமூக நிலையத்தின் புதிய கட்டடமும், அதன் வளர்ச்சியும் எங்களுக்கு இதைத்தான் உணர்த்துகிறது'' என்றுர்.

பின் வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. விஞயகமூர்த்தி, பொதுச் செயலாளர்: திரு. க. பொன்னுத்துரை, பொருளாளர்: திரு. மு. சின்னையா. மற்றும் 21 பேர்கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# சூரியன் கிழக்கே உ

## சரித்திரத்தின் மேடையில் செ



அல்பேனிய தொழிலாளர் கட்சியின் 5வது மாநாட்டில் தோழர் சண் உரை நிகழ்த்துகிருர்.

**அன்புள்ள தலைமைக் குழு அங்கத்தவர்களே!
அன்புள்ள பிரதிநிதிகளே! தோழர்களே!**

**முதலாவதாக, உங்களுடைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 5வது மாநாட்டில் சமுகம் தந்து உங்கள் விவாதங்களை கேட்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததைக் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாநாடு அல்பேனியாவின் சோஷலிச நிர்மாணத்திற்கும், வருங்கால வளர்ச்சிக்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததுமட்டுமல்ல, இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருப்பவர்கள் உட்பட்ட மார்க்சிஸ-லெனினிஸ இயக்கத்தின் வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும்.**

இரண்டாவதாக, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், அதன் மத்தியக் கமிட்டியின் சார்பிலும், இலங்கையின் முற்போக்கு இயக்கத்தின் சார்பிலும் உங்களுக்கும், உங்கள் மூலமாக சிறிய நாடான, ஆனுல் துணிகரமான அல்பேனியாவின் தொழிலாளர் கட்சிக்கும், அல்பேனியாவின் சகல மக்களுக்கும் எமது பூரணமான உறுதிமிக்க ஒருமைப்பாட்டையும், உங்கள் மாநாட்டின் வெற்றிக்கு நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது மார்க்சிஸ — லெனினிஸக் கோட்டையின து மேற்கு எல்லையின் முன்னணிப் படை நீங்கள்தான். ஏகாதிபத்தியம், நவீன திரிபுவாதம், சகலவிதமான பிற்போக்குவாதிகள் ஆகிய எல்லா எதிரிகளினுலும் முற்றுகையிடப்பட்ட போதிலும், புனிதமான மார்க்சிஸ —லெனினிஸச் செம்பதாகையை வெற்றிகரமாக உயர்த்திப் பிடித்து வருகின்றீர்கள். இதற்காக நாம் உங்களை வணங்குகின்ருேம்; உங்கள்மேல் என்றும் நன்றியுள்ளவர்களாகவும், கடமைப்பாடுடையவர்களாகவும் இருப்போம்.

### உற்சாகமளித்த உறுதி

ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகள் மத்தியில் தன்னந்தனியாக, தோழர் அன்வர் ஹோஷாவின் தலைமையிலுள்ள மத்திய கமிட்டியின் சரியான தலைமையின்கீழ் நீங்கள் முதலில், துரோகிகளான டிட்டோ கும்பலின் காட்டுமிராண்டித்தனத்திற்கு அடிபணிய மறுத்தீர்கள். அதன் பின் குருஷ்சோவின் தகிடுதத்தங்களுக்கு அடிபணிய மறுத்தீர்கள். சிறிய இலங்கைத் தீவின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கைக்கொண்ட உங்கள் நாடு, ஒரு சிறிய நாடு என குருஷ்சோவ் நினைத்தார். ஒக்டோபர் புரட்சி நடந்த நாடு, லெனின், ஸ்டாலின் ஆகியவர்களின் தேசம், உலகில் முதலில் சோஷலிஸத்தை நிர்மாணித்த நாடுஎன்றவகையில் சோவியத் யூனியனுக்கு அன்றிருந்த செல்வாக்கைப் பாவித்துச் சின்னஞ்சிறிய அல்பேனியாவை நசுக்கிவிட நினைத்தார் குருஷ்சோவ். நடந்தவற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, அந்தக் கஷ்டமான நாட்களில் தளராது தலைமை தாங்கிய உங்கள் கட்சியின் புத்திசாலித்தனமான, சரியான தலைமையைக் கண்டு நாம் வியப்படைகின்ருேம். ''குருஷ்சோவுக்கு அடிபணிவதைவிடப் புல்லைத் தின்போம்'' என்ற உங்கள் உறுதி எல்லாவற்றையும்விட மேலாக எமக்கு உற்சாகமளித்தது.

### திரிபுவாதிகள் அணைகட்டுகின்றனர்

ரூபிள்களிலும் பார்க்க கொள்கைதான் புனிதமானது என்பதை நீங்கள் நிரூபித்தீர்கள். ஒரு கையில் பிக்கானுடனும் மறு கையில் துப்பாக்கியுடனும் நீங்கள் சோஷலிஸத்தைக் கட்டி வளர்த்துப் பாதுகாத்தீர்கள். குருஷ்சோவ் திரிபுவாதிகளுக்கு நீங்கள் கொடுத்த உறுதியான, கொள்கை தளராத, ஆணித்தரமான பதில் சகல மார்க்சிஸ—லெனினிஸவாதிகளினதும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியது.

இன்று அந்தப் பெரும் கோமாளி சரித்திரத்தின் மேடையில் கெந்தித் திரிவதில்லை. எந்த வைபவமுமின்றி அவர் பதவியிலிருந்து உதைத்துத் தள்ளப்பட்டுவிட்டார். அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த அவரது வழித்தோன்றல்கள் பயமடைந்த எலிகளைப்போல் என்ன செய்வதென்றறியாது அங்குமிங்குமாக ஓடித்திரிகின்றனர். சர்வவியாபகமான மார்க்சிஸ—லெனினிஸப் பெருவெள்ளம் தம்மை அடித்துக்கொண்டு போவதைத் தடுக்க அணைக்கட்டுவதில் முனைந்து திரிகின்றனர். ஆனுல் உறுதிமிக்க சின்னஞ்சிறிய அல்பேனியா மார்க்சிஸம் — லெனினிஸம் என்ற வெல்லற்கரிய பதாகையை உயர்த்திப்பிடித்து வெற்றிகரமாக முன்னேறுகிறது. என்றும் அழியாத மார்க்சிஸ—லெனினிஸ உண்மை இறுதியில் வெற்றிபெறுவதை ஏகாதிபத்தியத்தினதும், நவீன திரிபுவாதிகளினதும் எந்த நடவடிக்கையாலும் தடுக்க முடியாது. இது சூரியன் கிழக்கே உதிப்பது போன்ற உண்மையாகும்.

### உயர்ந்த கட்டம்

தீர்க்கமான கட்டத்தில் வாழும் வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. உலக ஏகாதிபத்தியம் தனது இறுதி அழிவை எதிர்நோக்கும், உலகப் புரட்சி இறுதி வெற்றியை எதிர்நோக்கும் சகாப்தத்தில் நாம் வாழ்கின்ருேம். இந்தச் சகாப்தத்தில் வாழ்வது எமக்குக் கிடைத்த வாய்ப்பு என்பது போலவே, எமது கடமைகளும் கடுமையானவை. குறிப்பாக ஆட்சியைக் கைப்பற்றியுள்ள மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளின் கடமை மிகப் பெரியது.

நாம் வாழும் காலகட்டம், பலவிதத்திலும் மகத்தான ஒக்டோபர் புரட்சி முடிவடைந்த கட்டத்தைப் போன்ற காலகட்டமாகும். இவ்விரு கட்டங்களுக்கும் பொதுவான சில அம்சங்களும் உள்ளன. துரோகிகளாய் மாறிவிட்ட சோஷலிஸ ஜனநாயகக் கட்சிகளிலிருந்து விலகிய சிறு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் வழிகாட்ட லெனின் அன்று மூன்ருவது கம்யூனிஸ சர்வதேசியத்தை நிறுவினுர். லெனின்காலத்திய சோஷலிஸ ஜனநாயக வாதிகள் நடந்துகொண்ட முறையிலேதான் இன்று நவீன திரிபுவாதிகள் நடந்துகொள்கின்றனர். சரித்திரத்தின் சக்கரம் ஒருதடவை பூரணமாகச் சுற்றிவிட்டது. ஆனுல் அது நவீன திரிபுவாதிகளின் சகல துரோகங்கள் மத்தியிலும் தவிர்க்க முடியாத, இறுதியான, மிக உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளது.

### லெனின் உணர்ந்திருந்தார்

ஒக்டோபர் புரட்சி முடிவடைந்த கட்டத்தில் புதிய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் தலைமையளிக்க லெனின் இருந்ததைப் போலவே, இன்று எமக்கு சீனுவின் மகத்தான கம்யூனிஸ்ட் கட்சி மாஓ சே-துங்கின் கீர்த்தி மிகுந்த தலைமையுடனும், தோழர் அன்வர் ஹோஷாவின் தலைமையில் உங்கள் தொழிலாளர் கட்சியும் சரியான புரட்சிகர பாதைக்கு எம்மை வழிகாட்ட இருக்கின்றன. ஆட்சியைக் கைப்பற்றிய கட்சிகள் ஏனைய இடங்களில் புரட்சிக்கு ஆதரவு அளிப்பதில் அவற்றிற்குள்ள கடமைகளை லெனின் நன்கு உணர்ந்திருந்தார். ''சமமாக இல்லாது பல மட்டங்களில் அரசியல் வளர்ச்சி ஏற்படுவது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத நியதி'' என்றும், சோஷலிஸம் பல, அல்லது ஒரு முதலாளித்துவ நாடுகளில் தோன்ற முடியும் என்றும் அவர் கூறினுர். வெற்றி பெற்ற அந்த நாட்டு பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தின் உடைமைகளைப் பறித்துத் தனது சோஷலிஸ

அல்பேனிய தொழிலாளர் (கம்யூனிஸ்...
மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்...
செயற்குழு உறுப்பினர் தோழர் என்....
கள் நிகழ்த்திய உரை இங்கே பிரசுரிக்க...

உற்பத்தி முறையை நிறுவிய பின், உலகத்திற்கு ஓர் உதாரணமாக, முதலாளித்துவ உலகுக்கு எதிராக எழுந்து நிற்கும். ஏனைய நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களை தனது பாதைக்குக் கவரும். அந்த நாடுகளிலுள்ள முதலாளிகளுக்கெதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டும். அவசியம் எற்படும்போது அந்த

நாட்டுக்...
கும், ...
ஆயுத...
முன்வ...
இது ...
புரட்சி...

சமீ...
மார்க்...
கைகளை...
இன்று...
முதிர்...

னிஸச்...
டலை, ...
விவகா...
முயற்...
னர். ...
வது ச...
லெனி...
களின்...
தலையி...
பிடல...

### அமெரிக்க - சோவிய...

### கூட்டுச்சதி

**அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நல...
கும்பல் வியட்நாம் மீது "சமா...
கும் கபடத்தனத்தை நிஜ...
செய்கிறது. அமெரிக்காவில் ...
பேச்சுக்களிலும் சரி ஐ. நா. ...
மாகவோ, அல்லது மறைமுக...
புத் துருப்புகள் உடனடியாக ...
கூடக் கூறவில்லை. அதற்கு ...
பது" பற்றிப் பல தடவை பே...**

சோவியத் தலைமைக் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து வியட்நாமியப் புரட்சியின் கழுத்தைத் திருகு

வதற்...
பானத்...
அசிங்க...
அமெ...

# துரோகத்துக்கு எல்லை இல்லை

அமெரிக்க ஏகாதிபத்தியர்களின் கைப்பொம்மைக் கூட்டமாகிய தைலந்து நாட்டின் தனெம்—பிரபாசும் சகபாடிகளும் தம்மைக் கூலிக்கு அமர்த்திக்கொண்ட அமெரிக்க எஜமானர்களை மனங்குளிர வைப்பதற்கு தமது நாட்டின் ஒரு முழு நகரத்தையே பேராபத்துக்கு உள்ளாக்கத் தயங்கமாட்டார்கள் என்பதை அண்மையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் விளக்குகிறது.

உடோன் மகாணத்தின் வடு இன்று உலகெங்கும் பரவியுள்ளது. இந்த மாகாணத்தில் உள்ள அமெரிக்க இராணுவத்தளத்தில் இருந்தே விமானங்கள் சென்று வியட்நாமிய நகரங்களாகிய ஹனேய், ஹைபொங் மீது குண்டுகளைப் பொழிந்தன. இந்தக் கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்த இயற்கை அன்னையே அந்தப் படைத்தளத்தை அழித்துவிடக் கோபாவேசம் கொண்டாள். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து தைலந்தின் வட-கிழக்கு, வடக்குப் பிராந்தியங்களில் தொடர்ச்சியாகக் கடும் மழை பெய்து வந்ததால் உடோன் படைத்தளம் வெள்ளப்பெருக்கில் மூழ்கிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அமெரிக்கர்கள் பிறப்பித்த கட்டளையின் பேரில் தனெம் — பிரபாஸ் துரோகக் கும்பல் வெள்ளப் பெருக்கை உடோன் நகரை நோக்கிப் பாயத் திருப்பிவிட்டார்கள். ஒரு அன்னிய படைத்தளத்தைக் காப்பதற்காக லட்சக்கணக்கான தைலந்து மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட இருந்த பேராபத்தை அந்தத் துரோகக் கும்பல் பொருட்படுத்தவில்லை.

நீர்ப்பாசன வசதிகளை அமைத்துக்கொடுக்கிற சாட்டில் இந்தத் துரோகக் கும்பல் மக்களிடமிருந்து பணத்தைப் பிழிந்தெடுத்துப் பேரணைகளைக் கட்டி எழுப்பி, அதனுல் உற்பத்தி செய்யும் பெருவாரி நீர்மின் சக்தியை அமெரிக்கப் படைத்தளத்துக்கே விநியோகம் செய்கின்றது. அன்று இந்த ஆளும் கும்பல் மக்களின் பணத்தைப் பிழிந்து அமெரிக்க ஏகாதிபத்தியர்க்கு அபிஷேகம் செய்தது. இன்று அவர்களின் உயிர்களையே பலி கொடுக்கத் துணிந்துவிட்டது.




சென்ற நவம்பர் 1-ம் தேதி அல்பேனிய தொழிலாளர் கட்சியி...
நிகழ்த்துகின்ருர். மேடையின் பின்னுல் மார்க்ஸ், எங்கெல்ஸ், ...
படுங்கள்!'' என்ற சுலோகமும் காட்சியளிக்கின்றன.

# உதிப்பது போன்ற உண்மை!

## கெந்தித் திரிந்த கோமாளி

முதலா
க முடி
சோஷ
ரு முத
களில்
ன்றும்
வெற்றி
பாட்
ரித்துவ
மகளைப்
ஷலிஸ

நாட்டுச் சுரண்டும் வர்க்கங்களுக்கும், அரசுகளுக்கும் எதிராக ஆயுதம் தாங்கிப் போராடவும் முன்வரும்'' என்றார் லெனின். இது மிகவும் தெளிவான புரட்சிகரப் பிரகடனம்.

சமீப காலம் வரை சரியான மார்க்சிஸ - லெனினிஸ கொள்கைகளைக் கொண்டிருந்த சிலர் இன்று, அனுபவத்தில் முதிர்ந்த மார்க்சிஸ—லெனி

லாளர் (கம்யூனிஸ்ட்) கட்சியின் 5-வது
க கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற்குழு,
னர் தோழர் என். சண்முகதாசன் அவர்
ர இங்கே பிரசுரிக்கப்படுகிறது. —ஆ—ர்

நிறுவிய
உதா
ரித்துவ
எழுந்து
டுகளின்
தனது
ந்த நாடு
க்கெதி
ண்டும்.
அந்த

னிஸக் கட்சிகளின் வழிகாட்டலை, ஏனைய கட்சிகளின் உள் விவகாரங்களில் தலையிடும் ஓர் முயற்சியாகப் பார்க்கின்றனர். இதே விதத்தில் மூன்றாவது சர்வதேசியத்தை நிறுவிய லெனினையும் ஏனைய கட்சிகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக இவர்கள் குறிப்பிடலாமே!

### பயனுள்ள ஆலோசனை

தனது காலத்தில் லெனின், புதிய கம்யூனிஸ்ட் கட்சிகளையும் துரோகம் செய்த சோஷலிஸ ஜனநாயக வாதிகளிலிருந்து பிரிந்த குழுக்களையும் பார்த்து, சோஷலிஸ ஜனநாயக கொள்கைகளிலிருந்து பூரணமாக விடுபடுவது மட்டுமல்லாது, அதன் ஸ்தாபன பழக்கங்களிலிருந்தும், வேலைமுறைகளிலிருந்தும் பூரணமாக விடுபட்டு புதிய முறையான கட்சியை, போல்ஷவிக் முறையில் கட்டி எழுப்பவேண்டும் என்று சொன்னார். எமது சீனத் தோழர்கள் இதே ஆலோசனையைத்தான் இப்போது புதிதாக உருவாகும் மார்க்சிஸ—லெனினிஸக் கட்சிகளையும் குழுக்களையும் பார்த்துக் கூறுகின்றனர். இது மிகவும் பயனுள்ள ஆலோசனை. இதைக் கேட்காவிடில் நாம் வெற்றி பெற முடியாது. எமது மார்க்சிஸ—லெனினிஸக் கட்சிகள், வெள்ளையும் கறுப்பும் வேறுபட்டதுபோல் திரிபுவாதிகளிடமிருந்து வேறுபட்டு நிற்க வேண்டும்.

### ஏகாதிபத்தியத்தின் இறுதி ஆயுதம்

இப் பிரச்சினையில் அரை குறைப்பாதை எதுவும் இருக்க முடியாது. மார்க்சிஸ—லெனினிஸத்திற்கும் திரிபுவாதத்திற்கும் எந்தவித சமரசமும் இருக்க முடியாது. நவீன திரிபுவாதம் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஓர் வழி தவறிய இயக்கமாக இருந்த நிலையைத் தாண்டிவிட்டது. அது இப்போது உலக ஏகாதிபத்திய நலன்களுக்குப் பூரணமாக அடிபணிந்துவிட்டது. பொருளாதார தூண்டுதல்கள், இலாபம் பெறும் நோக்கம், சோவியத் அரசாங்கத்திற்கும் இத்தாலிய பியட் கம்பனிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம், அதன்மூலம் இத்தாலிய மூலதனக்காரர்களின் இலாபத்திற்கு சோவியத் தொழிலாளர்களைச் சுரண்டுவது, சோவியத் அரசாங்கத்திற்கும் ஜப்பானிய மூலதன வாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி சைபீரியச் செல்வங்களை தேடி வளர்த்தல் ஆகிய அதன் பொருளாதார நடவடிக்கைகள், சோவியத் சோசலிஸக் குடியரசில் மறுபடியும் முதலாளித்துவம் அமையும் பாதையைத் தெளிவாகக் காட்டுகின்றது. வியட்நாம் பிரச்சினையில் திரிபுவாதிகளின் நடவடிக்கைகள், அங்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூதுவர்கள்போல் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற யோசனையை விற்க முயல்வதும், வியட்நாம் மக்களை ஆதரிப்பதாக ஜாலம் செய்துகொண்டு எந்தநேரமும் வியட்நாமிய மக்களைக் கொன்று குவிக்கும் அமெரிக்கக் கொலைகாரர்களுடன் நட்புறவுகள், இரகசிய பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் ஆகிய சகல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும் குருடர்கள் அல்லாத சகலருக்கும் நவீன திரிபுவாதத்தின் உண்மை வேஷத்தைத தெரியப்படுத்தியுள்ளது. நவீன திரிபுவாதம், தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் உள்ள உலக ஏகாதிபத்தியத்தின் கடைசி ஆயுதம் என்பதும் அதைத் தனது இறுதிக் காலத்தில் சட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பதும் தெளிவாகின்றது. உலுத்து விழப்போகும் மரத்திற்கு முண்டு தேவைப்படுவது அதன் பலத்தையல்ல, பலவீனத்தையே காட்டுகிறது. முண்டை வெட்டி வீழ்த்துவது மரத்தை வீழ்த்த உதவும்.

— அடுத்த இதழில் முடியும்

### தலைமைதாங்கும் சக்தி



தொழிலாளர்களும் விவசாயிகளும்தான் அடிப்படையான புரட்சிகர சக்திகள். தொழிலாளர்கள்தான் புரட்சிக்குத் தலைமைதாங்கும் சக்தி. இந்த அடிப்படையான புரட்சிகர சக்திகள் இல்லாமல், தொழிலாளி வர்க்கத்தின் தலைமை இல்லாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியை வெற்றிபெறச் செய்வது சாத்தியமாகாது.

—மாஓ

---

சோவியத்

# வியட்நாமை விலைகூறும் முயற்சி!

- சென்ற வாரத் தொடர்ச்சி

த்தியத்தின் நலனுக்குச் சேவை செய்வதற்காக சோவியத் தலைமைக்
நாம் மீது ''சமாதானப் பேச்சுவார்த்தைகளை'' பலவந்தமாகத் திணிக்
ணத்தை நிறைவேற்றுவதற்காகத் தம்மால் முடிந்ததையெல்லாம்
அமெரிக்காவில் குரோமிகோவின் பேச்சுக்களிலும் சரி, பிரஷ்னேவின்
ம் சரி ஐ. நா. சபையிலும் சரி, அதற்கு வெளியேயும் சரி பகிரங்க
ல்லது மறைமுகமாகவோ வியட்நாமிலிருந்து அமெரிக்க ஆக்கிரமிப்
உடனடியாக வெளியேற வேண்டும் என வற்புறுத்தி ஒருவார்த்தை
ல்லை. அதற்கு மாறாக ''குண்டு வீச்சைக் கொஞ்சம் நிறுத்திவைப்
பல தடவை பேசியுள்ளது.

நம்பல்
த்தியத்
மியப்
திருகு

வதற்கு எடுக்கும் ஒத்துழைப்பானது வெட்கங்கெட்ட, அசிங்கமான ஒப்பந்தமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், தேசிய விடுதலைக்காகவும் வியட்நாம் மக்கள் நடத்திவரும் யுத்தம், வியட்நாம் மக்களின் நன்மைக்கு மட்டுமல்ல, ஆசியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலுமுள்ள ஏகாதிபத்திய விரோத புரட்சிகரப் போராட்டங்களுக்கும் முக்கிய தொடர்புடையதாகும். வீரமிக்க வியட்நாமிய மக்கள் தமது எதிர்ப்பின் மூலம் பல்லாயிரக்கணக்கான அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புக்களைச் சிக்கவைத்து, யுத்த களத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரமாண்டமான இராணுவ சக்தியைத் தலை குனியச் செய்து, அதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகம் தழுவிய நீண்ட நோக்கங்களை அடிப்படையில் தலை கீழாக்கியுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த ஆயுதந் தாங்கிய போராட்டத்தில் வியட்நாமிய மக்களின் வெற்றி அதிகரித்து வரும் அதே வேளையில், உலகில் அமெரிக்காவின் நிலை பலம் குன்றி வருகிறது. ஆசியா உட்பட உலகின் பல பாகங்களிலும் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன. எனவேதான் அமெரிக்க ஏகாதிபத்தியம் பரவி வரும் வியட்நாமிய மக்களின் புரட்சித் தீயை அணைக்கப் படாதபாடு படுகிறது.





…ழிலாளர் கட்சியின் 5-வது மாநாட்டில் அக் கட்சியின் தலைவர் தோழர் அன்வர் ஹோஷா உரை
…, எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் படங்களும், ''உலகத் தொழிலாளர்களே ஒன்று
…ன.

### உள்ளொன்று புறமொன்று

சோவியத் தலைமைக் கும்பல் வியட்நாமிய மக்களின் போராட்டத்திற்குத் தனது 'உதவி' யை ஊசலாட்டத்துடன்தான் பிரகடனம் செய்கிறது. ஆனால் உண்மையில், வியட்நாமிய மக்கள் தற்காப்பு யுத்தத்தில் தமது இரத்தத்தைச் சிந்திக்கொண்டிருக்கையில், அவர்களைக் கொன்று குவிக்கும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளருடன் நட்புறவு கொள்கிறது; கூடிக் குலாவுகிறது. ஆயுதப் பரிகரணம், அணு ஆயுத அபிவிருத்தியைத் தடை செய்தல், ஐரோப்பிய பிரச்சினை போன்ற சகலவற்றிலும் அமெரிக்காவுடன் பெரும் உடன்பாடு ஏற்படுத்த முனைகிறது. அதன் மூலம் தனது தாக்குதலை கிழக்குக்குத் திசை திருப்பும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிர் புரட்சி சதிக்குச் சேவை செய்கிறது. வியட்நாம் பிரச்சினையில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் இருமுனைத் தந்திரங்களை வெளிப்படையாகவும், பச்சையாகவும் ஆதரிக்கின்றது. இவ்வகையில் வியட்நாம் மக்கள் மீது இருமுனைத் தாக்குதலை ஏற்படுத்த முனைகின்றனர்.

### திட்டமிட்ட செயல்கள்

இப்போது ஜோன்சனும் களத்தில் இறங்கியுள்ளார். தமது அடிவருடிகளுடன் மாநாடு நடத்துகின்றார். வியட்நாமில் யுத்தத்தை விஸ்தரிக்கச் சதி செய்கின்றார். அதே பொழுதில் ''குண்டு வீச்சை நிறுத்துவதன் மூலம்'' ''சமாதானமாக'' வியட்நாம் பிரச்சினையைத் தீர்க்கப்பாடுபடுகின்றனர். உண்மையாகப் பார்க்கும்போது இதற்கு முன்னதாகவே பேசிவைத்துவிட்டு சோவியத் யூனியனும் அமெரிக்காவும் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றன. இதற்குப் பெயர் உதவியா? வியட்நாமிய மக்களின் அமெரிக்க எதிர்ப்பு யுத்தத்தில் ''உதவி'' என்ற நாமத்தை யாவது யாராவது இதில் காண முடியுமா? வியட்நாமிய மக்களின் புரட்சிகரப் போராட்டத்தை அடகுவைத்து விலை கூறுவதாகும் என்பதை இது பெருமளவில் தெளிவாக்கவில்லையா?

### குழிதோண்டிப் புதைக்கும் நோக்கம்

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சோவியத் தலைமைக் கும்பலுக்குமிடையே ஒரு புதிய எதிர்ப் புரட்சிக் கூட்டணி— ''பரிசுத்த தேவாலயக் கூட்டணி'' ஒன்று உண்மையில் ஏற்பட்டிருக்கிறதென்பதை பல சான்றுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இக் கூட்டணி வியட்நாம் மக்களை மட்டும் எதிர்த்து நிற்கவில்லை. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களினது ஏனைய புரட்சிகரப் போராட்டங்களையும் எதிர்த்து நிற்கிறது. இந்த பரிசுத்தக் கூட்டணியின் அம்பு முக்கியமாகச் சீனாவைப் பார்த்துக் குறிவைக்கப்பட்டுள்ளது. சமாதானப் ''பேச்சுவார்த்தை'' என்ற ஏமாற்றை வெற்றியாக்கி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வியட்நாமிய மக்களின் தேசிய விடுதலைக்கான உன்னத நோக்

— 7-ம் பக்கம் பார்க்க

சாதி அமைப்பைத் தகர்க்க

-செந்திவேல்

# வாலிபப் படையினரே எழுந்து வாரீர்!

**வடமாகாணத்தில், ஆண்டாண்டு காலமாக பெரும்பான்மை சமூகம் என்று சொல்லிக்கொண்டு சகல சுக போகங்களையும் அனுபவித்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் அடித் தட்டு வாழ்க்கையில் தமது காலத்தை கழிக்கும் சாதாரண ஏழைத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் அடக்கி ஒடுக்கி அதன் மூலம் தமது சொத்துக்களையும் சுகங்களையும் காப்பாற்றி வந்துள்ளனர். இத்தச் சாதி வெறி பிடித்த பிற்போக்குக் கும்பல்களின் சகல அடக்கு முறைகளுக்கும் அடங்கி, இந்த நாட்டிலே மனித உரிமையற்று, மனித மிருகங்களாகக் கடந்த காலத்தில் இம் மக்கள் வாழ்ந்து வந்ததை தமிழன் கண்ட பண்பாட்டில், தமிழன் வளர்ந்த வரலாற்றில் யாரும் மறுக்க முடியாது.**

இந்த இழி நிலைக்கு சாவு மணி அடிப்பதற்கு இன்று சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று சொல்லப் படுகின்ற தொழிலாளி—விவசாயிகள் மத்தியில் இருக்கக் கூடிய முற்போக்கு வாதிகளும், மனித உரிமையை உணரும் பெரும்பான்மை என்று சொல்லப் படும் மக்களைச் சேர்ந்தவர்களில் சிலரும், புரட்சிகர இயக்கங்களுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களும், மற்றும் புரட்சிகர ஸ்தாபனங்களும் இன்று முன்னணியில் நிற்கின்றன. ஆகவே மிகவும் படு கேவலமான இப் பிரச்சனையில் வட மாகாணத்தில் இருக்கக்கூடிய, குறிப்பாகச் சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று ஒரு சிலரால் குறிப்பிடப்படும் தொழிலாளி, விவசாயிகள் மத்தியிலுள்ள வாலிபர்கள் இப்பிரச்சனையைப் பற்றி நன்கு சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய ஒரு காலமாகும் இது. ஏனெனில் வாலிபர்களின் சக்திவிரயமாக்கப்படுவதை நாம் ஏற்க முடியாது. அவர்களின் சேவை, அவர்களின் தியாகம் இந்த நாட்டில் உரிமையிழந்து வாழும் தொழிலாளி விவசாயிகளுக்கு மிகவும் அளப்பரியது. ஆகவே தான் வாலிபர்கள் இன்றைய கால கட்டத்தை உணர்ந்து, சரியான பாதையில், எதிர்காலம் வரவேற்கக் கூடிய பாதையில் செல்ல வேண்டும்.

## அடிப்படையில் வர்க்கப் பிரச்சினை

இன்று உச்ச கட்டத்தை அடைந்துள்ள இப் பிரச்சனையை மேலோட்டமாகப் பார்ப்பதிலும் பார்க்க சிறிது ஆழமாகப் பார்ப்பதினால் மட்டுமே நாம் இதனைச் சரியாகக் கணிக்க முடியும். வட பகுதியில் சாதி வெறி தாண்டவமாடும் பகுதிகளை எடுத்துக் கொண்டு பார்த்தால் அப் பகுதிகளில் வாழும் தொழிலாளர்களும், விவசாயிகளும் தான் இப் பிரச்சனைக்கு உட்பட்டவர்கள். இவர்களிடம் இன்றுகூட ஒரு கால் பரப்புக் காணி கிடையாது. இவர்கள் குடி இருப்பதும், விவசாயம் செய்வதும் அந்தப் பகுதியில் வாழக் கூடிய ஒரு சில குடும்பங்களுக்குச் சொந்தமான நிலங்களாகவே இன்றும் இருந்துவருகிறது. உதாரணமாக வட பகுதியில் சாதி தாண்டவமாடும் புத்தூர், நீர்வேலி போன்ற கிராமங்களை உதாரணம் காட்டலாம். இக் கிராமங்களில் கிட்டத்தட்ட மூவாயிரம் குடும்பங்களுக்கு ஒரு துண்டு நிலம்கூடக் கிடையாது. முழு நிலங்களும் மளவராயர் குடும்பம் என்று சொல்லப்படுகின்ற ஒரு குடும்பத்துக்கே சொந்தம். இக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்று அப்பகுதியில் வாழும் ஏழைத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் மனிதத் தன்மை யற்ற முறையில் நடத்திவருகின்ருர்கள். கேவலம் இருபதாம் நூற்ருண்டில் மிருக வாழ்க்கை வாழும் அம்மக்கள் சகல விதத்திலும் இச் சீமான்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். செருப்புக் காவுவது தொடக்கம், செத்த பிணம் காவுவது வரை இம் மக்கள் நிலத்தின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிருர்கள். மேலும் இந்த மக்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து விடுவார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்குள் பல சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி ஒவ்வொருவரையும் பிரித்து வைத்து அதன் மூலம் தமது சொத்துக்களையும், சுகபோகங்களையும் காப்பாற்றி வருகின்றனர். உதாரணமாக சலவைத் தொழில் செய்யும் ஒரு தொழிலாளி உயர்ந்த சாதி மக்களுக்கு மாத்திரம் தொழில் செய்ய வேண்டும். அவர்கள் மற்ற எவருக்கும் தொழில் செய்ய முடியாது. அதே போலத்தான் சவரத் தொழிலாளியும். சலவைத் தொழிலாளி வீட்டுக்குள் செல்லலாம், ஆனுல் சவரத் தொழிலாளி வீட்டுக்குள் செல்ல முடியாது. மொத்தத்தில் எல்லாத் தொழிலாளிகளும் தாழ்த்தப்பட்டவர்கள், ஆனுல் தங்களுடைய தேவைகளைப் பொறுத்தும், அவர்களுக்குள்ளேயே ஐக்கியம் ஏற்பட்டு விடாமலும் தடுக்க தொழிலாளி விவசாயிகளை பிரித்தும் வைத்துள்ளனர். அதேபோலத்தான் ஏனைய தொழிலாளர்கள், விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் சாதிப் பெயர் வைத்து அவர்களுக்குள் உயர்வு தாழ்வு ஏற்படுத்தி வைத்துள்ளனர். இத்தனையும் நிலத்தின் பெயரால், தமது வர்க்க நலத்தைப் பாதுகாக்கச் செய்யும் செயல் என்பதை நம்மால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆகவேதான் சாதிப் பிரச்சினை உண்மையில் நிலப்பிரபுத்துவத்தின் ஒரு அம்சம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தொழிலாளர்களையும், விவசாயிகளையும் உள்ளடக்கிய இப்பிரச்சினை ஒரு வர்க்கப் பிரச்சனையே.

## இப் பிரச்சினையில் வாலிபர் பங்கு என்ன?

இன்று இப் பிரச்சினையைப் பற்றி வாலிபர்கள் குறிப்பாக சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று சொல்லிக் கொள்ளப்படும் மக்கள் மத்தியிலுள்ள வாலிபர்கள் நன்கு சிந்திக்க வேண்டும். அவர்கள் தமது கீழ் நிலையிலுள்ள வாழ்க்கைமுறையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காது சீரழிந்து போகும் தென் இந்தியச் சினிமாப் படங்களுடனும், சினிமா நடிகர்களுடன் மூழ்கிக் கிடக்கும் நிலை இன்று காணப்படுகிறது.

தொழிலாளி விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கு சங்கங்கள் அமைத்துப் போராட வேண்டிய வாலிபர்கள், இன்று வெறும் ஆபாசங்களை நடித்து தமது வியாபார நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் எம். ஜி. ஆர்., சிவாஜி போன்ற நடிகர்களுக்கு சங்கங்களும், மன்றங்களும் அமைத்து அனுவசியமாக தமது வாலிப சக்தியை தேவையற்ற வழியில் பிரயோகிக்கின்றனர். சீரழிவுப் பாதையில் செல்லும், அந்நிய கலாச்சாரத்தை இந்த நாட்டில் திணிக்கும் இந்த நாட்டு இளம் சந்ததியினரைப் பாதிக்கும் சினிமா உலகில் இருந்து வாலிபர்கள் விடுபட வேண்டும். வாலிபர்கள் தங்களுக்கு முன்னுல் இருக்கின்ற சரித்திரக் கடமையை, அடக்கி ஒடுக்கப் பட்டு, மனித உரிமை மறுக்கப்பட்டு வாழும் மக்கள் எதிர்பார்க்கும் அந்த விடுதலையைப் பிரதிபலிக்கும் வாலிபர்களாக மாறவேண்டும். பிரச்சினைப் பற்றிச் சிந்திக்கவும், போராடவும் வாலிபர்கள் எவ்வளவு தூரம் பின் நிற்கிருர்களோ, அவ்வளவு தூரத்துக்கு இந்த நாட்டில் அமைந்துள்ள கேவலமான பிரச்சினைகள் தீர நாட்கள் செல்லும். ஆகவே தான் வாலிபர்கள் எதிர்காலத்தை உணர்ந்து, அந்த எதிர் காலம் யாருடைய கைகளில் இருக்கப் போகிறது என்பதைச் சிந்தித்து சரியான பாதையில் செல்லவும், சாதிப் பிரச்சினை மட்டுமல்ல இந்த நாட்டில் இருக்கக்கூடிய சகல பிரச்சினைகளையும் நிர்மூலமாக்கி, இந்த கேடு கெட்ட முதலாளித்துவ சமூக அமைப்பையே மாற்றி அமைக்கும் பாதையில் இந் நாட்டில் பரந்து வாழும் தொழிலாளி விவசாய வாலிபர்களுடன் இணைந்து போராட முன் வரவேண்டும்.

## அகிம்சையால் தீர்க்கமுடியாது

இன்று இச் சாதிப் பிரச்சினையை சத்தியாகிரகத்தின் மூலம் தீர்த்துவிடலாம் எனச் சிலர் பகற் கனவு காண்கின்றனர். ஆனுல் இந்த அகிம்சைப் போராட்டத்தினுல் உலகில் பிரச்சினை எங்காவது தீர்ந்ததா என்பதுதான் நம் முன் உள்ள கேள்வி. சிலர் கூறலாம், இந்திய நாடு சுதந்திரம் பெற்றது அகிம்சையால் என்று. ஆனுல் பெயரளவில் தான் அகிம்சை. இந்திய சுதந்திர வரலாறைச் சரியாகப் புரிந்துகொண்ட எவரும் இந்த அகிம்சையின் தன்மையைப்பற்றி புரிந்துகொள்வார்கள். இந்தியச் சுதந்திரத் தியாகிகள் தமது போராட்டத்தின் மூலமும், வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடியதன் மூலமும் லட்சக்கணக்கான மக்களைப் பலி கொடுத்துத்தான் இந்தியச் சுதந்திரம் பெறப்பட்டது. ஆனுல் வெள்ளையர் தமது சுரண்டலைத் தொடர்ந்து நீடிக்க காந்தியைப் பாவித்து அவருக்குப் பட்டம் கட்டி வைத்தார்களே தவிர, அகிம்சையால் இந்திய நாடு சாதித்தது ஒன்றும் இல்லை. அப்படி அகிம்சை சாதித்திருந்தால் இன்று இந்தியாவில் நடைபெறும் சம்பவங்கள் எமக்கு நல்ல பாடமாகும். மற்றும் அமெரிக்கப் பிற்போக்குவாதிகளுக்கு எதிராக இன்று நீக்கிரோ மக்கள் எந்தப் பாதையில் போராட்டத்தைக் கொண்டு செல்கின்ருர்கள்? அகிம்சையின் மூலம் உரிமை பெற்றுவிடலாம் என அமெரிக்க நீக்கிரோத் தலைவர்களில் சிலர் நம்பினுர்கள். ஆனுல் இன்று பலாத்காரத்தை தவிர வேறு வழியின்றி—அடி தருபவனுக்கு திருப்பி அடி கொடுப்பதன் மூலம்தான் அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்கள் முன் செல்ல முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர். இன்றைய புரட்சிக் காலகட்டத்தில் எதிரிக்குச் சலுகை செய்யும், ஒருசில தலைவர்களை வளர்ப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட வறட்டுத் தத்துவமான அகிம்சை, அடக்கி ஒடுக்கப் பட்டுவரும் மக்களுக்கு எந்த விதத்திலும், எக்காலத்திலும்

— 7ம் பக்கம் பார்க்க





1963-ம் ஆண்டு நடந்த சாதிக் கலவரத்தின்போது நீர்வேலியில் தீக்கிரையான ஒடுக்கப்பட்ட மக்களின் வீடுகளை இப்படங்களில் காணலாம்.



நீர்வேலியில் வீடிழந்து நின்ற குடும்பத்துடன் இலங்கை வாலிபர் சம்மேளனத்தின் வடபிரதேசக் கிளையைச்சேர்ந்த தோழர்கள் சூடாமணி, குணரத்தினம், தர்மதாச ஆகியோர் உரையாடிக்கொண்டிருக்கின்றனர். மேற்படி சம்மேளனத்தின் வட பிரதேசக் கிளைத் தோழர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணம், பொருள் சேர்த்து உதவியது குறிப்பிடத்தக்கது.

**சாதி ஒழிப்பு இயக்கம்**

**கார்னிவல்லுக்கு இரவு 11 மணிக்கு மேலும் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதிக்கப்படுகிறது. சாதி ஒழிப்புக் கூட்டங்களுக்கு 8 மணி வரை தான் அனுமதி. ஏன் இந்த பாரபட்சம்?**

## சாதி ஒழிப்பு இயக்கம்
### துன்னுலைக் கூட்டத்திற்கு ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி மறுக்கப்பட்டதேன்?

# வாலிபப் படையினரே எழுந்து . . .

6-ம் பக்கத் தொடர்

ஆயுதமாகப் பயன்பட முடியாது, அல்லது பாவித்து வெற்றி பெறவும் முடியாது என்பதை வாலிபர்கள் திடமாக நம்ப வேண்டும்.

### தமிழரசுக் கட்சியால் செய்யமுடியாது

வட மாகாணத்தில் செல்வாக்குப் பெற்ற கட்சியான தமிழரசுக் கட்சியால் சாதிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று சிலர் கூறுகிறுர்கள். ஆனுல் தமிழரசுக் கட்சியின் சுயரூபம் என்ன என்பதைப் பற்றி சிறிது சிந்திக்க வேண்டும். தேர்தல் காலங்களில் லஞ்சத்தின் மூலமும், பணத்தை அள்ளிக் கொட்டியும் வோட்டுப் பொறுக்கி பாராளுமன்றம் செல்லும் முதலாளித்துவக் கட்சிதான் தமிழரசுக் கட்சி. அக் கட்சி நிலப்பிரபுக்களின், சாதி வெறி பிடித்த பெரும் மனிதர்களின் கட்சி என்பதை எமது கட்சி கடந்த காலங்களில் தெட்டத் தெளிவாகக் கூறி வந்துள்ளது. அதே கட்சி எத்தன்மையது என்பதை இன்றைய நடைமுறை நன்கு புலப்படுத்துகின்றது. அவர்கள் யார் பக்கம் என்பதை இன்று புரியக்கூடியதாக இருக்கிறது. இந்த மக்களுடைய போராட்டத்தை ஆதரிக்க முடியாது என தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், தந்தை செல்வநாயகம் போன்ருேர் பத்திரிகைகளில் அறிக்கைகள் விட்டிருந்ததை ஞாபகப் படுத்தவேண்டும். தமிழரசுக் கட்சியை சேர்ந்த சிலர் ஒரு சில ஏழை மக்களின் வீட்டில் சமமாகத் தேனீர் குடித்துவிட்டாலோ அல்லது, தமது வீடுகளில் ஒரு சிலரைச் சமமாக நடத்தினுலோ சாதிப் பிரச்சனை தீரப்போவதில்லை. அவர்கள் அப்படிச் செய்வதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஏமாற்றி தேர்தல் காலங்களில் தமது பாராளுமன்ற ஆசனங்களைப் பாதுகாத்துக் கொள்கிறுர்களே தவிர, சாதாரண மக்களுடைய பிரச்சனை தீரவேண்டும் என்ற நோக்கம் கிடையாது.

ஆகவே தமிழரசுக் கட்சியினுலோ அல்லது அவர்கள் சொல்வதுபோல சட்டம் இயற்றுவதினுலோ சாதிப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. அடிப்படையில் சட்டம் யாரைப் பாதுகாக்கிறது? இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன் இதே பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. சாதியின் பெயரால் ஒரு மனிதனைத் தூஷித்தால் ஆறு மாதம் சிறை, அல்லது ஐந்நூறு ரூபா அபராதம். ஆனுல் இன்று உண்மையில் சட்டத்தால் தீர்க்க முடியும் என்று நம்பினுல் இந்தப் பத்து வருட காலத்தில் இந்தச் சட்டத்தைப் பாவித்து ஏன் இப் பிரச்சனையைத் தீர்த்திருக்க முடியாது? இதிலிருந்து சட்டம் யாருக்காக என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். மேலும் சட்டத்தைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் ஒரு பகுதியாகிய பொலிஸ் நிலையங்களில் சாதாரண ஏழைத் தொழிலாளி விவசாயிகள் எந்த முறையில் நடத்தப்படுகிறுர்கள்? சட்டத்தைப் பாதுகாக்கும் அவர்களே சாதிப் பெயரைச் சொல்லி கீழ்த்தரமான வார்த்தைகளால் மக்களைக் கொடுமைப்படுத்தும்போது சட்டம் எங்கே நித்திரைகொள்கிறதோ தெரியவில்லை. ஆகவே சட்டம் முதலாளித்துவத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும், மற்றும் பிற்போக்குச் சக்திகளையும் பாதுகாப்பதற்கே என்பதை நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

### எமது இயக்கங்கள்மூலமே இறுதித் தீர்வு

எமது கட்சி இயக்கங்கள், குறிப்பாக வாலிபர் இயக்கம் இப் பிரச்சினையில் கடந்த காலங்களில் பல போராட்டங்களை நடத்தியுள்ளது. 1963ம் வருடத்தில் நீர்வேலி என்ற கிராமத்தில் நடைபெற்ற மனிதத்தன்மையற்ற சாதிக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஏழைத் தொழிலாளி விவசாயிகளுக்காக பல வழிகளிலும் நின்று உழைத்துள்ளது. அவர்களுக்கு பொருளுதவி, கொளுத்தப்பட்ட வீடுகளைத் திரும்பவும் சீர்படுத்துவதில் எமது இயக்கத்தைச் சேர்ந்த வாலிபர்கள் நூற்றுக்கணக்காகப் பங்குபற்றி அம் மக்களுக்கு உதவி செய்துள்ளனர். அதுமட்டுமல்ல, பத்தாயிரத்துக்கு அதிகமான துண்டுப் பிரசுரங்களை வட மாகாணம் எங்கும் விநியோகித்து, இந்த அநாகரீகச் செயலுக்காக யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தி நாம் என்றைக்கும் அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்களின் பக்கம்தான் என்பதை வெளிப்படுத்தியது. அதுமட்டுமல்ல, நாம் காட்டும் பாதையின் மூலம்தான் பிரச்சினை தீரமுடியும் எனவும் நம்பிக்கையாகக் கூறி வந்துள்ளது. மேலும் அந்தக் காலங்களில் எமது கட்சியும், வாலிபர் இயக்கங்களும் இந்தப் பிரச்சனையில் தலையிட்டு மக்களின் பக்கம் நின்று போராடி வந்துள்ளது.

ஆகவேதான் வாலிபர்கள் இங்குள்ள நிலைமையை உணர்ந்து, போராட்டத்தைத் தவிர வேறு வழியால் தீர்க்க முடியாது என்பதை நம்பி இன, மத, உயர்வு, தாழ்வு, சாதி முதலிய எல்லாக் குறுகிய நோக்கங்களையும் வெறுக்கும் தொழிலாளி விவசாயிகளுடைய எதிர்காலத்துக்காக தங்களை அர்ப்பணித்த இந்த நாட்டுப் புரட்சிகரமான இயக்கங்களில், குறிப்பாக வாலிபர்களின் புரட்சிகர ஸ்தாபனமான இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தில் ஆயிரம் ஆயிரம் புரட்சிகர வாலிபர்களுடன் இணைந்து போராடுவதன்மூலம் சாதிப் பிரச்சினை உட்பட, இந்த நாட்டில் பிற்போக்கு சக்திகளினுல் நீரூற்றி வளர்க்கப்படும் அத்தனை பிரச்சினைகளையும் நிர்மூலமாக்க அணிதிரள வேண்டும். அதுதான் வாலிபர்களின் குறிப்பாக, வட மாகாணத்தில் வாழக்கூடிய வாலிபர்களின் முன்னுள்ள கடமை.

# தமிழ் தலைவர்களின் வெட்கக்கேடு

“சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி 18-ந் தேதி நடத்த இருந்த சத்தியாக்கிரகம் தமிழரசு வாதிகளாலும் இதர பிற்போக்கு வாதிகளாலும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தலைவர்கள் என்று கூறித்திரியும் செல்வநாயகங்களும். பொன்னம்பலங்களும் தமிழர் மத்தியிலுள்ள பிரச்சினையைத் தீர்க்க ஒரு சிங்கள நண்பரின்—அரசாங்க அதிபரின் உதவியை நாடியதைப் போன்று வெட்கக்கேடு வேறு என்ன இருக்கிறது? தீண்டாமைப் பிரச்சினையை இவர்களால் தீர்க்க முடியாதா? இவர்கள் தீர்க்க மாட்டார்கள். ஏனெனில் இவர்கள் சாதியைப் பாதுகாப்போரின் பிரதிநிதிகளாவர். ஆகவே அரசாங்க அதிபரை நடுவராக வைத்து மூன்று மாதங்களுக்குள் சாதியை ஒழிப்போம் என்று இவர்கள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறப் போவதில்லை’’

இவ்வாறு சென்ற 17-ந் தேதி துன்னுலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சாதி ஒழிப்புக் கூட்டத்தில் பேசிய தோழர் வீ. ஏ. கந்தசாமி கூறினுர்.

இந்தக் கூட்டத்திற்கு பொலிஸார் ஒலிபெருக்கி வழங்க மறுத்தனர். எனினும், ஒலிபெருக்கி இல்லாமலே கூட்டம் நடைபெற்றது.

தோழர் இ. நா. அப்புத்துரையின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர் கந்தசாமி மேலும் பேசியதாவது:

ஒரு சில ஆலயங்களையும், கடைகளையும் திறந்து விடுவதால்மட்டும் சாதி ஒழிந்து விடாது. இந்தச் சாதியமைப்பைத் தீர்க்க வேண்டுமானுல் வர்க்கப் போராட்டத்தின் மூலம் வர்க்கங்களும், சாதிகளும் இல்லாத புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.

உலகின் எந்த நாட்டிலும் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளைப் பெற்றுர்கள். இன்று நிறவெறியை எதிர்த்து நீக்ரோ மக்கள் புரட்சிகரமாகப் போராடுகின்றனர். ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் எதிர்த்து நடத்தும் வர்க்கப் போராட்டத்தின் மூலம் உரிமைகளை வென்றெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

திபேத் மக்கள் பெரிய நிலப்பிரபுக்களைத் தமது தோல்களின் மேல் சுமந்து சென்றதோடு, குதிரைகளுக்கு அடிப்பதைப் போன்று நிலப்பிரபுக்கள் கொடுத்த சவுக்கடிகளையும் தாங்கிக்கொண்டு அடிமைகளாக வாழ்ந்தார்கள். இது ஒருகாலம். ஆனுல் இன்று நிலப்பிரபுக்களினதும், லாமாக்களினதும் ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு, அவர்களே ஆளுவோராக இருக்கின்றனர்! சீனம் ஒரு சோஷலிஸ்ட் நாடு அங்கே பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலுள்ள ஒரு அரசாங்கம் நடைபெறுகின்றது. ஆதலால் அதன் கீழ் திபேத்திய மக்களும் சகல உரிமைகளையும் பெற்று எல்லோருடன் சரிசமமாக வாழ்கின்றனர். முன்னேறுகின்றனர். அதேபோல இந்த நாட்டிஉள்ள ஐந்து லட்சம் ஒடுக்கப்பட்ட மக்களும் மார்க்சிஸ்ட்—லெனிஸவாதிகளுடன் போராடுவதன் மூலமே தமது உரிமைகளைப் பெற முடியும்.

தோழர் நீர்வை பொன்னையன் பேசுகையில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயங்களுக்கோ, தேநீர் கடைகளுக்கோ, சலூன்களுக்கோ போக முடியாது. சில பகுதிகளில் இன்று கூட நல்ல உடுப்புகள் அணியவும் நல்ல வீடுகளில் வாழவும் முடியாது; இப்படி எத்தனையோ அடக்குமுறைகள். இந்த அடக்குமுறைகளிலிருந்து விடுபடவும், மனித உரிமைகளைப் பெறவும் வாலிபர்கள் புரட்சிகரமான இயக்கத்தில் பங்குகொண்டு போராட முன்வர வேண்டும். தழரசு, தமிழ் காங்கிரஸ்வாதிகளும், பார்லிமெண்டுக்கு போக வோட்டுப் பொறுக்குவதற்காக உங்களிடம் வந்து சாதி ஒழிப்போம், சட்டம் கொண்டு வருவோம் என்று வாயால் சொல்வார்களே தவிர, நடைமுறையில் அவர்களால் சாதியை ஒழிக்க முடியாது. அவர்களை நம்பி ஒடுக்கப்பட்ட மக்கள், ஏமாந்துவிடக் கூடாது. என்ருர்,

மற்றும் எஸ். எப். போஜியா, என். கணேசன், பொ, தம்பிமுத்து, வெ. கதிர்காமு ஆகியோரும் பேசினர்.

---

5-ம் பக்கத் தொடர்

கத்தைக் குழி தோண்டிப் புதைப்பதுதான் இதன் உடனடி நோக்கம்.

### ‘‘ஐக்கிய நடவடிக்கை’’யின் அர்த்தம்

உலக ரீதியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஐக்கிய நடவடிக்கை எடுத்து வரும் சோவியத் தலைமைக் கும்பல் ‘‘வியட்நாமுக்கு ஆதரவாக’’ ‘‘சோஷலிச நாடுகள் ஐக்கிய நடவடிக்கை’’ எடுப்பதுபற்றி வாய் கிழியப் பேசுவது எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது! இவர்களின் ‘‘ஐக்கிய நடவடிக்கை’’ என்பது ஐக்கியமாகத் துரோகம் செய்தலாகும். இப்பேற்பட்ட ‘‘ஐக்கிய நடவடிக்கை’’ இல்லாதபோது கூட, சோவியத் தலைமைக் கும்பல் மிகவும் வெளிப்படையாகவும், வெட்கமின்றியும் வியட்நாமை விலை கூற முனைந்தது. ‘‘ஐக்கிய நடவடிக்கை’’ விஷயத்தில் வெற்றிபெற்ருல் அதன் துரோகத்தனமான காட்டிக் கொடுப்புக்கு இது மேலும் உதவுபடியாகாதா? சோவியத் தலைமைக் கும்பல் தான் விரும்பிய பெரும் உடன்படிக்கையை அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஏற்படுத்துவதற்காகத்தான் ‘‘ஐக்கிய நடவடிக்கை’’ பற்றி ஆர்வப்படுகிறது,

### ஆதரவளிக்க வேண்டும்

ஒரு புதிய கிழக்கத்திய மியூனிச்சுக்கான பெரும் சதி செய்யமுயலும் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் உலக மக்கள் மத்தியில் மேலும் மெலும் தெளிவாக அம்பலப் பட்டுவருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கெதிராகவும், தேசிய விமோசனத்திற்காகவும் துணிகரமாகப் போராடும் வியட்நாமிய மக்களின் நியாயமான கொள்கை அசைக்க முடியாதது. வியட்நாமிய மக்கள் தமது தற்காப்புப் போராட்டத்தை இறுதி வரை நடத்தவும், புதிய கிழக்கத்திய மியூனிச்சுக்கான பெரும் சதியைத் தீர்க்கமாக எதிர்க்கவும், அதை முறியடிக்கவும் வியட்நாமிய மக்களுக்கு உண்மையான ஏகாதிபத்திய விரோத நாடுகள் அனைத்தும் ஆதரவு அளிக்க வேண்டும்.

### 70 கோடி சீன மக்களின் ஆதரவு

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தேசிய விமோசனத்திற்காகவும் வியட்நாம் மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு சீனுவின் ஆதரவு உறுதியானது. தளர முடியாதது. ஒக்டோபர் 1-ம் தேதி லின் பியா ஓ நிகழ்த்திய பேச்சு 70 கோடி சீன மக்களின் மன உறுதியையும், திடசித்திரத்தையும், தீர்மானத்தையும் புடம் போட்டுக் காட்டியது.

‘‘சகல விதமான தயாரிப்புகளும் நாம் செய்துள்ளோம். நாம் கணக்கில்லாத தியாகங்கள் செய்ய நேரிடினும் உறுதி குலையாது. வியட்நாமிய மக்களை ஆதரிப்போம். அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்தும் தேசிய விமோசனத்திற்காகவும் வியட்நாம் மக்கள் இறுதி வரை நடத்தும் போராட்டத்தில் எமது பூரணமான, திடமான ஆதரவைத் தவருது அளிப்பதென நாம் தீர்க்கமாக முடிவு கட்டியுள்ளோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வியட்நாமிய மக்களின் தேசிய புரட்சிகர யுத்தம், ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய புரட்சிகரப் போராட்டங்கள், மற்றும் உலகப் புரட்சி ஆகியவற்றினுல் பரவி வரும் தீச்சுவாலையை அணைப்பதற்கு அமெரிக்கத் தலைமையில் ஏகாதிபத்தியமும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதமும் ஒன்றிணைகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைபோன்ற கபட நாடகங்களை துரிதமாக ஆடுகின்றன. உலக மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்கும் வரை தமது சூழ்ச்சிகளில் இவர்கள் ஒருபோதும் வெற்றி பெற மாட்டார்கள்’’ என்ருர் தோழர் லின் பியாஓ.

### மேலும் துரிதமாகப் பரவும்

‘‘மக்கள் மட்டுமே உலக சரித்திரத்தைப் படைக்கும் ஆக்க சக்தி’’ என்று தலைவர் மாஓ சே-துங் கூறியுள்ளார். ‘‘மக்களால் நடத்தப்படும் புரட்சி வெற்றி பெற முடியும் ஏகாதிபத்திய வாதிகளும் அதன் அடிவருடிகளும் தோற்கடிக்கப்பட முடியும் என்பதை இது நிரூபிக்கின்றது’’ என்றும் அவர் கூறியுள்ளார். வியட்நாமின் சரித்திரம் வியட்நாமிய மக்களினுல் மட்டுமே படைக்க முடியும். வியட்நாமின் வருங்காலம் வியட்நாமிய மக்களினுல் மட்டுமே தீர்மானிக்கப்பட முடியும். சரித்திரத்தின் திசையைத் திருப்பி, வியட்நாமிய மக்களின் முடிவு எப்படி இருக்க வேண்டுமென ஆணையிட முயலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சோவியத் தலைமைக் கும்பலினதும் முயற்சி ஒருபோதும் நிறைவேருது! அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் சாம்பலாகும் வரை வியட்நாமிய மக்களின் புரட்சித் தீ சுவாலைவிட்டெரியும்; மேலும் துரிதமாகப் பரவும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
சாதி ஒழிப்பு இயக்கம்

**கூட்டங்கள்**

**நடந்தவை**

உடுவில், மட்டுவில், அல்வாய்,
உரும்பிராய், துன்னாலை.

**நடக்க இருப்பவை**

கரவெட்டி, வராத்துப்பளை, பருத்தித்துறை,
கரணவாய், வேலம்பிராய், உணுவில்,
பூநகரி, கொட்டடி, (யாழ்ப்பாணம்) அரியாலை, (காந்தி நிலையத்தருகு)
அரியாலை, (கிழக்கு) தெல்லிப்பளை, காங்கேசன்துறை,
பொன்னாலை, இன்னும் பல இடங்கள்.

## இறுதி எச்சரிக்கை .....

1-ம் பக்கத் தொடர்

ளர்களுக்குக் கூடிய சம்பளமும், ஏனைய சேவை வசதிகளும் நியாயமில்லை என நீங்கள் கருதுவதற்குக் காரணம் என்னவென்று எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. பயிற்சிபெற்ற தொழிலாளர்களை விட லிகிதர்களுக்குக் கூடிய சம்பளம் கொடுக்கும் முறை, இலங்கை உட்பட ஒரு சில நாடுகளைத் தவிர வேறெங்குமில்லை. இது முந்திய காலனி முறையிலிருந்து நாம் பற்றிக் கொண்டுள்ள ஒரு தொற்று நோய். ஆனால் அதைத் தொடர்ந்தும் வைத்திருப்பது அவசியமில்லை.

இதில் எம்மைத் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம். லிகிதர்கள் சார்பில் இலங்கை வர்த்தக ஊழியர் முன் வைத்துள்ள கோரிக்கைகளை நாம் பூரணமாக ஆதரிக்கின்றோம். நாம் கேட்பதெல்லாம், அடிப்படைக் கடமையான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளின் இலாபத்திற்குப் பிரதானகர்த்தாக்களாக உள்ள தொழிலாளர்களுக்கும், கடந்த இரு வருடங்களாக நாம் வற்புறுத்தி வந்த, இப்போது நீங்கள் உங்கள் லிகிதர் சேவையில் உள்ளவர்களுக்குக் கொடுக்க இணங்கியுள்ள கோரிக்கைகளைத் தரவேண்டும் என்பது தான்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் காரியக்கமிட்டி நேற்றுக் கூடியபோது இக் கடிதத்தை அனுப்புமாறு என்னைப் பணித்துள்ளதுடன் எமது 13வது கோரிக்கையாக கொலட்ஸ் லிமிட்டெட், கொழும்பு பெயின்ட்ஸ் ஆகியவற்றில் நடைபெறும் வேலை நிறுத்தங்களைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் எனவும், வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக விலக்கப்பட்ட சகல தொழிலாளர்களும் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் எனவும் முடிவெடுத்துள்ளது என்பதையும் தயவுசெய்து கவனத்திற் கொள்க.

எமது நியாயமான கோரிக்கைகளை தொடர்ந்தும் தர நீங்கள் மறுத்தால், தொழிலாளர்கள் மத்தியில் தொடர்ந்தும் நீங்கள் பாரபட்சம் காட்டினால் மேலும் வேறு எந்தவித முன்னறிவித்தலின்றி வேலைநிறுத்தம் செய்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான நிலைமைக்கு அவசியம் ஏற்படாதென நாம் நேர்மையாக நம்புகின்றோம்.

### யூ. என். பி. ஆட்சியில்

# வேலைநிறுத்தம் செய்ய மறுப்பதேன்

**ஒரு நாளுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வுக்கான கோரிக்கையை ஆதரித்து ஐக்கியப்பட்ட நடவடிக்கை எடுக்க முன்வரும்படி முக்கூட்டு முன்னணிக் கட்சிகளின் தலைமையிலுள்ள தொழிற்சங்கங்களுக்கு சி. டி. யூ. எப். விடுத்த அழைப்புக்கு எந்தவித பதிலும் கிடைக்காததுபற்றி சி. டி. யூ. எப். பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் கருத்துத் தெரிவித்தார்.**

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலம் பூராவும் வேலைநிறுத்தம் நடத்திய தொழிற்சங்கங்கள், திருமதி பண்டாரநாயக்க அரசாங்கத்தின் போது 21 கோரிக்கைகளை ஆதரித்து வேலை நிறுத்தம் செய்ய முன்வந்த தொழிற்சங்கங்கள் இன்று யூ. என். பி. ஆட்சியில் இருக்கையில் ஏகாதிபத்திய கம்பெனிகளுக் கெதிராக ஐக்கிய தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க மறுப்பதையிட்டுத் தனது ஆச்சரியத்தைத் தெரிவித்தார்,

இது பல தொழிலாளர்களுக்கு — பிரதானமாக முக்கூட்டு முன்னணித் தலைமையிலுள்ள தொழிலாளர்களுக்குப் புரியாத புதிராக உள்ளது என்றும், ஏற்கனவே லிகிதர்களுக்குக் கொடுக்கச் சம்மதித்துள்ள ஒரு ரூபா சம்பள உயர்வை தர மறுப்பதற்கு முதலாளிமார் முன்வைக்கும் நியாயம், தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களுக்கிடையே உள்ள ஐக்கியமின்மையேயாகும் என்று தோழர் சண்முகதாசன் மேலும் குறிப்பிட்டார்.

நாளுக்கு ஒரு ரூபா சம்பள உயர்வை நடைமுறை சாத்தியமாக்குவதற்காக அரசியல், தொழிற்சங்க வித்தியாசங்களை மறந்து சகல தொழிலாளர்களும் ஐக்கியப்பட்டுச் செயலாற்றும்படி தோழர் சண் வேண்டிக்கொண்டார்.

தமது நியாயமான கோரிக்கைகளுக்காகச் சகல தொழிலாளர்களும் ஐக்கியக் குரலை எழுப்ப இதுவே சரியான சந்தர்ப்பம்.

தொழிலாளியின் நண்பன் விவசாயி

### சுரண்டும் கும்பலுக்கு அரை இலட்சம் ஏக்கர் காணி!

# ஆட்சியின் துரோகம்

இந்த நாட்டில் இலட்சக் கணக்கான ஏழை விவசாயிகளுக்கு நிலமில்லை. அவர்கள் நிலத்திற்காக ஏங்கித் தவிக்கையில், முதலாளித்துவ யூ. என். பி. ஆட்சி அவர்களை வஞ்சித்துவிட்டு, அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டு அந்நியக் கம்பெனிகளுக்கும், தனது சுரண்டும் வர்க்கத்தாருக்கும் பல்லாயிரக் கணக்கான முடிக்குரிய காணிகளை வழங்கியிருக்கிறது. இதைப் பல தடவைகள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் 'தொழிலாளி'யும் எடுத்துக் காட்டிவந்துள்ளது. இப்போது கடைசியாக வெளிவந்த செய்தியின்படி சுரண்டும் கும்பலுக்குப் பின்வரும் வகையில் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கம்பெனிகளுக்கு 23, 657 ஏக்கர்,

தனியார் சங்கங்களுக்கு 11, 513 ஏக்கர்.

தனிப்பட்ட புள்ளிகளுக்கு 11, 545 ஏக்கர்.

கிட்டத்தட்ட அரை இலட்சம் ஏக்கர்! இவற்றில் ஆகக் கூடுதலான காணி பொலநறுவை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இங்கு கொடுக்கப்பட்ட காணிகளின் தொகை 12, 200 ஏக்கர். பதுளையில் 9.000 ஏக்கர். ஏனைய காணிகள் மொனராகலை, வவுனியா, புத்தளம் மாவட்டங்களாகும்.

உப—உணவுப் பொருட் செய்கைக்காகத் தான் சுரண்டும் குப்பலுக்கு நிலம் வழங்கப்பட்டதாகக் கதையளக்கிறது, ஆட்சி. ஏன், நிலமற்ற உண்மையான விவசாயி உப—உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யமாட்டானா? அவனுக்கு நிலம் அளித்து, உப—உணவு உற்பத்திக்கான வசதிகளையும் செய்து கொடுத்து, உற்பத்தியை அதிகரிக்கவும் உழவனை வாழவைக்கவும் கூடாது என்று யூ. என். பி. ஆட்சி கருதுகிறது போல் தெரிகிறது. அதனால்தான் அது இத் துரோகத்தைச் செய்து வருகிறது.

### பிரிவிகவுன்சிலுக்கு சி. டி. யூ. எப்.

# அப்பீல்

**முடிவை தொழிலாளர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்**

சுப்றீம் கோர்ட்டின் முடிவுப்படி 1966—ஏப்பிரல் 15-ந் தேதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (இத்தேதியில்தான் தொழில் முறையீட்டு மன்றங்கள் (லேபர் டிரிபியூனல்ஸ்) நீதி சேவைக் கமிஷனால் நியமிக்கப்பட்டன) இதற்கு முன் நியமிக்கப்பட்ட தொழில் முறையீட்டு மன்றங்கள் சட்டரீதியானவையல்ல என்பது சுப்றீம் கோர்ட்டின் முடிவு.

சி. டி. யூ. எப். இம் முடிவை எதிர்த்து பிரிவிக்கவுன்சிலுக்கு விண்ணப்பித்துள்ளது. பிரிவிக்கவுன்சிலின் தீர்ப்பை வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள 1966 ஏப்பிரல் 15-ம் தேதிக்கு முந்திய தொழில் முறையீட்டு மன்றங்களுக்கு விண்ணப்பித்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

சென்ற வருடம் ஐந்து நீதியரசர்களைக்கொண்ட சுப்றீம் கோர்ட், மூவர் சாதகமாகவும் இருவர் பாதகமாகவும், தொழில் முறையீட்டு மன்ற தலைவர்கள், நீதி சேவைக் கமிஷனால் நியமிக்கப்படாததால், சட்ட ரீதியானவர்களல்ல எனத்தீர்ப்பு வழங்கியது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

இத்தீர்ப்பை எதிர்த்து சி. டி. யூ. எப். பிரிவிக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்தது. சென்ற வாரம் பாரிஸ்டர் திரு. என். சத்தியேந்திரா பிரிவிக்கவுன்சில் முன் சி. டி. யூ. எப். சார்பில் வாதாடினார். விவாதம் முடிவடைந்து தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் தீர்ப்பு என்னவென்பதை தெரிவிக்க முடியுமென நாம் நம்புகிறோம்.

### சீன அணு ஏவாயுத பரீட்சை

# விமோசனத்திற்கு வழி திறக்கும் ஆயுதம்

அல்பேனியா தொழிலாளர் கட்சியின் 5-வது காங்கிரசில் கலந்துகொள்ளும் முகமாக அல்பேனியாவுக்குச் செல்லும் வழியில், சீன மக்கள் ஒரு ஏவுகணையுடன் கொண்ட அணுகுண்டுப் பரீட்சை நடத்தியுள்ள மகத்தான சாதனை பற்றிக் கேள்விப்பட்டேன். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இம் மகத்தான சாதனையை நான் போற்றுகின்கின்றேன். சீன மக்களையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் மகத்தான தலைவர் மா சே-துங்கையும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு தோழர் சண் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார். அவ்வறிக்கை மேலும் கூறியதாவது:-

இம் மகத்தான சாதனை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், சோவியத்திரிபுவாதிகள், சகலவித பிற்போக்குவாதிகள் ஆகியோரை கதிகலங்கச் செய்துள்ளது போலவே, சகல புரட்சிவாதிகளையும் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளையும் புளகாங்கிதம் அடையச் செய்திருக்கின்றது.

மா சே-துங்கின் சிந்தனைகள் காட்டிய வழியில், நீண்ட கால நோக்குடன் ஏகாதிபத்தியத்தையும் சகல பிற்போக்குவாதிகளையும் வெறுக்கப் பழக்கிக்கொண்டோம். உலக ஏகாதிபத்தியத்தின் அழிவு நிச்சயம் என்ற எமது நம்பிக்கை சீனாவின் இந்தச் சாதனையால் மேலும் உறுதியடைகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களை அணு ஆயுதங்கள் மூலம் பயமுறுத்திய காலம் மலையேறிவிட்டது. சீனா ஒரு அணு ஆயுத நாடாவதை தடை செய்யலாம் என்ற சோவியத் திரிபுவாதிகளின் கனவு மலையேறிவிட்டது.

சீனாவின் கையில் அணு ஆயுத பலம் இருப்பது சமாதானத்திற்கான, ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனத்திற்கான மகத்தான ஆயுதமென நாம் பூரணமாக நம்புகிறோம். உலக ஏகாதிபத்தியத்திற்கும், நவீன திரிபுவாதத்திற்கும் கொடுத்த மிகப் பலமான அடி இதுவேயாகும்.

இச் சாதனை மா சே-துங் சிந்தனைகளுக்கும். சீனாவின் நிலைமைகளுக்கு இணைய அதை அமுல் நடத்துவதற்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

இது எமக்குக் கிடைத்த வெற்றி எனக் கருதி இச் சாதனையை மறுபடியும் போற்றுகிறோம்.

### வருந்துகின்றோம்

அகில இலங்கை வாலிபர் சங்க சம்மேளன மட்டக்களப்புக் கிளையின் உப தலைவர் தோழர் என். அமிர்தநாயகம் அவர்களின் தந்தை திரு. நாகமணி அவர்கள் கார் விபத்தால் அடைந்த மரணத்தையிட்டு வருந்துகின்றோம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி அச்சகம்'', 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.